



# 1927 - 2005

## அமரர் உயர்திரு. நாகமுத்து பரராச சிங்கம்

## நினைவு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# திரு. நாகமுத்து பரராசசிங்கம்


அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 28.09. 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளிச்சுடராக
எல்லோராலும் போற்றி புகழ்பெற வாழ்ந்து,
எங்கள் குடும்ப உயர்விற்காக அயராது
உழைத்து, எம்மை நல்நிலை அடையச்
செய்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ
வழிகாட்டி மேலோங்க வைத்த உமது உயர்ந்த
திருப்பாதமதில் இம்மலரை காணிக்கையாக
வைத்து வணங்குகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம் 13.06.1927

மறைவு 02.09.2005

அமரர்

# நாகமுத்து பரராசசிங்கம் (புங்குடுதீவு)

(முன்னாள் திருகோணமலை வர்த்தகர்)

அவர்கள்

திதி நிர்ணய வெண்பா

பேராரும் பார்த்திபத்தில் பேரான புரட்டாதியில்
சீராரும் சதுர்த்தசி திதிதனில் – நேரான
நிறை குணத்தார் நாகமுத்து பரராசசிங்கம்
யாக்கை விட்டு இறை யடியில் சங்கமித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருநெறி பன்னிரு திருமுறைகள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்

**1ஆம் திருமுறை**

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோன்
தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப் பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்
தேத்த வருள் செய்த
பீடுடைய பிரம்மா புரமேவிய
பெம்மா னிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் திருமுறை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணி திரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோ தம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே.

## 3ஆம் திருமுறை

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

## 4ஆம் திருமுறை

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5ஆம் திருமுறை

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண் புன்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

### 6ஆம் திருமுறை

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையி னகத்தானை யணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர் கடங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

### 7ஆம் திருமுறை

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணி களைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநல் விடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே

### 8 ஆம் திருமுறை

வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட
முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ வேண்டி
என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பம் மன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9 ஆம் திருமுறை

இடர் கெடுத் தென்னை ஆண்டுகொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர் மணி விளக்கின் உள்ளொளி விளங்குற்
தூயநற் சோதியுட் சோதி!
அடல் விடைப்பாகா! அம்பலக்கூத்தா!
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைக்
தொண்டனே பணியுமா பணியே!

### 10 ஆம் திருமுறை

சரிதாகி நான்குந் தருஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்
பொருளான நந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்க வைத்தானே.

### 11ஆம் திருமுறை

வருந்தே னிறந்து பிறந்து மயங்கும் புலன்வழி போய்ப்
பொருந்தே னரகிற் புகுகின் றிலேன் புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்து கொண்டுண்டு பிறிதொன்றிலாசையின்றி
யிருந்தே னினிச்சென் றிரவே னொருவரை யாதொன்றுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெண்ணிலா மலர்ந்த வேணியா
யுன்றன் றிருநடந் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலானந்த வருவி நீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணிரை னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

## திருப்புகழ்

கருவினினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள் பல வே தெரிந்து மதனாலே
கரிய குழன் மாதர் தங்க ளடிசுவடு மார் புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி
அரகர சிவாயவென்று தினமுநினை யாமனின்று
அறுசமய நீதி யொன்று மறியாமல்
அசனமிடு வார் கடங்கள் மனைகள் தலை வாசனின்று
அனுதினமு நாணமின்றி யழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியதொரு மாளரங்கர்
உலகளவு மான் மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபவங்க விருது கவிராஜசிங்க
முறை புகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர் சிறை மீளவென்று
பழநி மலை மீதில் நின்ற பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் அருளிய

# திருமந்திரம்

சைவ சமயத்துக்கே ஒரு கருவூலமானவர் திருமூலநாயனார். இவருடைய பெருமை அளவிடற்கரியது. நாயன்மார்களிலேயே காலத்தினால் முந்திய இவர் சீலத்தினாலும் உயர்ந்தவர் சுந்தர மூர்த்தி நாயனார். திருத்தொண்டர் தொகையுள் இவரைக் குறிப்பிடும் போது நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் என சிறப்பாகப் பாடுகிறார். திருமூலர் பரமசிவயோகி தமிழை ஓதி தமிழால் இறைவனை ஓதுவதற்கே வந்தவர் அவர்.

திருமந்திரம் 3069 பாடல்களை உடையது. தமிழையும் சைவத்தையும் உலகில் நிலை நிறுத்துவதாக அமைகிறது. திருமந்திரம் நிலையாமை பற்றி எடுத்துக் கூறுகிறது. நிலையில்லா வாழ்வை நிலை நிறுத்துவதற்கு ஒரே வழி முத்தி பெறுதல் என திருமூலர் கூறுகிறார். அது எப்படி; இறைவனை அடைவதே முத்திக்கு வழி என்பது புலனாகிறது.

"நிலையாமை என்பதின் தத்துவம்;
உயிரினங்களுக்கு தீங்கு செய்யாமல் வாழ்வதேயாகும்"
"அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

தமிழ் மரபில் இதுவரை காணப்பெறாத பலப்பல விடயங்கள் திருமந்திரத்தில் சொல்லப்பெற்றுள்ளன. திருமூலர் நிலையமை பற்றி பேசுகிறார். இவர் ஒரு யோகி சித்தர் இவரது கருத்து மனித வாழ்வுக்கு ஏற்புடையதா? என இல்லறத்தார் ஏங்குவதுண்டு. அது குறித்து இல்லற வாழ்வில் இருப்போர் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

சிவயோகியான திருமூலர் இறைவனை அடைவதே மனிதனின் வழி என காட்டியுள்ளார். அவ்வாறு இல்லாதுவிடின் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து துன்பத்தில் தோய வேண்டுமென கூறுகிறார். மனிதன் தெரிந்து கொள்ள வேண்டிய திருமூலரின் 58 திருமந்திரங்களை சமர்ப்பிக்கின்றோம். அறிந்து திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து

ஒன்று அவன்தானே இரண்டு அவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்
சென்றனன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே

## யாக்கை நிலையாமை

மண் ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர் விழின் மீண்டும் மண் ஆனாற் போல்
எண் இன்றி மாந்தர் இறக்கின்ற வாறே 1

பண்டம் பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழி நடவாதே 2

ஊர் எலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணம் என்று பேர்இட்டு
சூரை அங்காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே 3

காலும் இரண்டு முகட்டு அலக்கு ஒன்றுஉள
பாலுள் பருங்கழி முப்பத்திரண்டு உள
மேல் உளகூரை பிரியும் பிரிந்தால் முன்
போல் உயிர்மீளப் புக அறியாதே 4

சீக்கை விளைந்தது செய்வினை மூட்டுஇற்ற
ஆக்கை பிரிந்தது அலகு பழுத்தது
மூக்கினில் கைவைத்து மூடிட்டு கொண்டு போய்க்
காக்கைக்குப் பலிகாட்டியாவாறே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரோடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே 6

மன்றத்தே நம்பிமாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை பெற்று ஏறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்று அத்தா என்னத் திரிந்திலன் தானே 7

வாசந்தி பேசி மணம் புணர்ந்து அப்பதி
நேசந் தெவிட்டி நினைப்பு ஒழிவார்பின்னை
ஆசந்தி மேல் வைத்து அமைய அழுதிட்டுப்
பாசம் தீ ச்சுட்டுப் பலி சுட்டினார்களே 8

கைவிட்டு நாடிக் கருத்து அழிந்து அச்சு அற
நெய் அட்டிச் சோறு உண்ணும் ஐவரும் போயினார்
மை இட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய் விட்டுப் போக விடை கொள்ளுமாறே 9

பந்தல் பிரிந்தது பண்டாரம் கட்டு அற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்பு உறு காலத் துரிசு வரமேன் மேல்
அன்புடையார்கள் அழுது அகன்றார்களே 10

நாட்டுக்கு நாயகன் நம் ஊர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை ஒன்று ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறை கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே 11

முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும்
செப்பமதில் உடைக்கோயிலுள் வாழ்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ப மதிள் உடைகக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஒட்டெடுத்தார்களே 12

மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதனம் அது ஏற்றி
பொதுவூர் புறஞ் சுடுகாடு அது நோக்கி
மது ஊர வாங்கியே வைத்து அகன்றாரே 13

வைச்சு அகல் உற்றது கண்டு மனிதர்கள்
அச்சு அகலாது எனநாடும் அரும் பொருள்
பிச்சு அதுவாய்ப் பின் தொடர்வுறும் மற்றுஅவர்
அச்சு அகலா நின்று இளைக்கின்றவாறே 14

ஆர்த்து எழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகு இட்டு எரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவார் நீதி இலாரே 15

வளத்து இடை முற்றத்து ஓர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண் கொண்டு குயவன் வனைந்தான்
குடம் உடைந்தால் அவை ஓடு என்று வைப்பார்
உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே 16

ஐந்து தலைப்பதி ஆறு சடைஉள
சந்து அவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேல் அறியாமே 17

அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்தும்
கொத்தி உலைப் பெய்துகூழ் அட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அறைக் கீரை வித்து உண்ண
கத்தி எடுத்தவர் காடு புக்காரே 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் முகடு இல்லை கீழும் வடிம்பு இல்லை
காலும் இரண்டு முகட்டு அலகு ஒன்று உண்டு
ஓலையால் மேய்ந்தவர் ஊடு வரியாமை
வேலையான் மேய்ந்தோர் வெள்ளித்தளியே 19

கூடம் கிடந்தது கோலங்கள் இங்கு இல்லை
ஆடும் இலையமும் அற்றது ஆறுதலும்
பாடுகின்றார் சிலர் பண்ணில் அமுதிட்டுத்
தேடிய தீயினில் தீயவைத்தார்களே 20

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தான் இல்லை ஏதேனும் ஏழைகாள்
பட்டதுபார் மணம் பன்னிரண்டு ஆண்டினுள்
கெட்டது எழுபதில் கேடு அறியீரே 21

இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்சது அறியார் முழுங்குவர் மூடர்
விடிஞ்சு இருள் ஆவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே. 22

மடல் விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவம் தொழாமல்
இடர் படர்ந்து ஏழாம் நரகில் இடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடுமாறே 23

குடையும் குதிரையும் கொற்றவாளும் கொண்டு
இடையும் அக்காலம் இருந்து நடுவே
புடையும் மனிதனார் போகும் அப்போதே
அடையும் இடம் வலம் ஆருயிராமே 24

காக்கை கவரில் என் கண்டார் பழிக்கில் என்
பால் துளி பெய்யில் என் பல்லோர் பழிச்சில் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்பையுள் நின்று தொழில் அறச்செய்து ஊட்டும்
கூத்தன் புறப்படுப் போன இக் கூட்டையே 25

அருளும் அரசனும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர் கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரோடும் செல்வனைச் சேரில்
மருளும் பினை அவன் மாதவம் அன்றே 26

இயக்குஉற திங்கள் இருட் பிழம்பு ஒக்கும்
துடக்கு உறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மடக்கு அற நாடுமின் வானவர் கோனைப்
பெயல் கொண்டல் போலப் பெருஞ் செல்வம்ஆமே 27

தன்னது சாயை தனக்கு உதவாது கண்டு
என்னது மாடு என்று இருப்பர்கள் ஏழைகள்
உன் உயிர் போம் உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண் ஒளிகண்டு கொள்ளீரே 28

ஈட்டிய தேன்பூ மணம் கண்டு இரதமும்
கூட்டிக் கொணர்ந்து ஒரு கொம்பு இடைவைத்திடும்
ஒட்டித் துரந்திட்டு அது வலிபார் கொளக்
காட்டிக் கொடுத்து அது கைவிட்டவாறே 29

தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்க மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்து உங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலும் ஆமே. 30

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர் மிசைச் செல்லும் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கு ஓர் வீடுபேறு ஆகச்
சிமிழ் ஒன்று வைத்தமை தேர்ந்து அறியாரே 31

வாழ்வு மனைவியும் மக்கள் உடன் பிறந்
தாரும் அளவு ஏது எமக்கு என்பர் ஒண்பொருள்
மேவும் அதனை விரிவு செய்வார் கட்குக்
கூவும் துணை ஒன்று கூடலும் ஆமே. 32

வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கு இல்லை
பூட்டும் தறி ஒன்று போம் வழி ஒன்பது
நாட்டிய தாய் தமர் வந்து வணங்கிப் பின்
காட்டிக் கொடுத்து அவேர் கைவிட்டாவறே 33

உடம் பொடு உயிரிடை விட்டு ஓடும் போது
அடும் பரிசு ஒன்றில்லை அண்ணலை எண்ணும்
விடும் பரிசாய் நின்ற மெய்ந் நமன் தூதர்
சூடும் பரிசத்தையுஞ் சூழகில்லாரே 34

**இளமை நிலையாமை**

கிழக்கு எழுந்தது ஓடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார் விழி இலாமாந்தர்
குழக்கன்று மூத்து எருதாய்ச் சில நாளில்
விழக் கண்டும் தேறார் வியன் உலகோரே 35

ஆண்டும் பலவும் கழிந்தன அப்பனைப்
பூண்டுக் கொண்டு ஆடும் புகுந்து அறிவார் இல்லை
நீண்டன காலங்கள் மீண்டும் கொடுக்கினும்
தூண்டு விளக்கின் சுடர் அறியாரே 36

தேய்ந்து அற்று ஒழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்து அற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்து அற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்து உற்றுக் கொள்ளும் உயிர் உள்ள போதே 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தனே 38

பாலன் இளையன் விருத்தன் என நின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலம் கடந்து அண்டம் ஊடு அறுத்தான்அடி
மேலும் இடந்து விரும்புவன் நானே 39
காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாழ் நாள் கழிவதும்
சாலும் அவ்வீசன் சலவியன் ஆகிலும்
ஏல நினைப்பவர்க்கு இன்பம் செய்தானே 40

பரு ஊசி ஐந்தும் பையினுள் வாழும்
பரு ஊசி ஐந்தும் பறக்கும் விருகம்
பரு ஊசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்
பரு ஊசிப் பையும் பறக்கின்றவாறே 41

கண்ணதும் காய்கதிரோனும் உலகினை
உள்நின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்
விண் உறுவாரையும் வினை உறுவாரையும்
எண் கூறும் முப்பதில் ஈர்ந்தொழிந்தாரே 42

ஒன்றிய ஈரெண் கலையும் உடன்உற
நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வர் திகைப்பு ஒழியாரே 43

எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவது அறியாமல்
எய்திய நாளில் இரந்து கண்டேனே 44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் நிலையாமை

தழைக்கின்ற செந்தளிர்த் தன் மலர்க் கொம்பில்
இழைக்கின்ற எல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பு இன்றி எம்பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியார் அவர் தாமே 45

ஐவர்க்கு ஒரு செய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச் செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச் செய்யைக் காவல் விட்டாரே 46

மத்தளி ஒன்றுளே தாளம் இரண்டுஉள
அத்துளே வாழும் அரசரும் அஞ்சுள்ள
அத்துளே வாழும் அரசனும் அங்குளன்
மத்தளி மண்ணாய் மயங்கியவாறே 47

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடும் நந்தியை
வேம் கடம் அன்றே விரகு அறியாதவர்
தாங்க வல்லார் உயிர் தாம் அறியாரே 48

சென்று உணர்வான் திசை பத்தும் திவாகரன்
அன்று உணர்வால் அளக்கின்றது அறிகிலர்
நின்று உணரார் இந்நிலத்தின் மனிதர்கள்
பொன்று உணர்வாரிற் புணர்க்கின்ற மாயாமே 49

மாறு திருத்தி வரம்பு இட்ட பட்டிகை
பீறும் அதனைப் பெரிது உணர்ந்தார் இல்லை
கூறும் கருமயிர் வெண்மயிர் ஆவது
ஈறும் பிறப்பும் ஓர் ஆண்டு எனும் நீரே 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடுப்பு இடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பு இடு மூன்றிற்கும் அஞ்சு ஏரிகொள்ளி
அடுத்து எரியாமல் கொடு மின் அரிசி
விடுத்தன நாள்களும் மேல் சென்றனவே 51

இன்புஉறு வண்டு இங்கு இன்மலர் மேற்போய்
உண்பது வாசம் அது போல் உயிர்நிலை
இன்புஉற நாடி நினைக்கிலும் மூன்று ஒளி
கண் புறம் நின்ற கருத்துள் நில்லானே 52

ஆம் விதி நாடி அறம் செயமின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டும் அது என் சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமை வல்லார்க்கே 53

அவ்விடம் பேசி அறம் கெட நில்லன்மின்
வெவ்வியன் ஆகிப் பிறர் பொருள் வல்லவன் மின்
செவ்வியன் ஆகிச் சிறந்து உண்ணும் போது ஒரு
தவ்விக் கொடு உண்மின் தலப்பட்டபோதே 54

**கொல்லாமை**

பற்று ஆய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒன்மலர்
நல்தார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்று ஆறும் ஆவி அமர்ந்து இடம் உச்சியே 55

கொல்விடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக்காரர் வலிகயிற்றாற் கட்டிச்
செல்லிடு நில் என்று தீவாய் நரகிடை
நில்விடும் என்று நிறுத்துவர் தாமே 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புலால் மறுத்தல்

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன் தன் தூதுவர்
செல்லாகப் புற்றித்தீவாய் நகரத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே 57
கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோருக்கு
இலையாம் இவை ஞானானந்தத்து இருத்தலே 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு ஒரு நாடு வேண்டும்— எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்— எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் — என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள், எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.

மேதகு வே.பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக தத்துவ ஞானி" சுவாமி விவேகானந்தரின் சிந்தனையில் இருந்து சில துளிகள்".....!!!

- தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கின்றது. நீ எதையும் சாதிக்கமுடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்த போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாதபோது தான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ ஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்தவுடனேயே அழிவு வருகிறது.

- வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியும் பெரும் மன உறுதியும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும் விடாமுயற்சி பெற்றவன் 'சமுத்திரத்தையே குடித்துவிடுவேன். 'எனது சந்தர்ப்பத்தால் மலைகள் நொருங்கி விழுந்தாக வேண்டும்.' என்று சொல்கிறான். அத்தகைய ஆற்றலை அத்தகைய மன உறுதியை நீ பெற்றிடு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடைவாய்.

- எழுந்து நின்று போராடு. ஓர் அடியும் பின்வாங்கக் கூடாது. கருத்து இதுதான். எது வந்தாலும் போராடி முடி. தங்கள் நிலையிலிருந்து நட்சத்திரங்கள் பிறழட்டும். முழு உலகும் நமக்கு எதிராக எழுந்து எதிர்த்து நிற்கட்டும். மரணம் என்றால் வேறு உடை மாற்றுவதுதான். அதனால் என்ன போயிற்று? இப்படிப் போராடு! கோழையாவதனால் நீ எந்தவொரு பயனையும் பெறமாட்டாய்.. ஓர் அடி நீ பின் வாங்குவதனால் எந்த ஒரு துரதிஷ்டத்தையும் தவிர்த்து விட முடியாது. உலகிலுள்ள அத்தனை கடவுள்களையும் நீ கூவியழைத்துப் பார்த்தாகிவிட்டது. துன்பம் அதனால் ஓய்ந்துவிட்டதா? நீ வெற்றி பெற்ற போது கடவுளா உனக்கு உதவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வந்தார்கள். அதனால் என்ன பயன்? போராடி முடி. நீ எல்லையற்றவன். மரணமற்றவன்.. பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால், நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு! விழித்துக் கொள். எழுந்து நின்று போராடு.

✧ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாததாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

✧ ஒரு கருத்தை எடுத்துக் கொள். அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்கு. அதையே கனவு காண். அந்த கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள் நரம்புகள், உன் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும். அந்த நிலையில் மற்ற எல்லாக் கருத்துக்களையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இதுதான் வழி. நாம் உண்மையிலேயே பாக்கியவான்களாக விரும்பினால் மற்றவர்களையும் பாக்கியவான் களாக்க விரும்பினால் நம்முள் நாம் மேலும் ஆழ்ந்து சென்றாக வேண்டும். எந்த ஒரு சக்தியையும் புதிதாக உண்டாக்க முடியாது. ஏற்கனவே உள்ள சக்தியைத்தான் வேறு திசைக்கு நாம் திருப்பிவிட முடியும். எனவே, நமது கைகளில் ஏற்கனவே உள்ள மாபெரும் ஆற்றல்களைஅடக்கியாள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவற்றை மனதில் வலிமையைக் கொண்டு வெறும் மிருக சக்தியாக இருப்பதற்குப் பதிலாக, ஆன்மிகச் சக்தியாக இருக்கச் செய். பிரமசசாரியம்தான் எல்லா ஒழுக்கங்களுக்கும், எல்லா மதங்களுக்கும் அடித்தளமாக விளங்குகிறது என்பது இதனின்று தெளிவாகிறது.

✧ சிந்தனையின் தொண்ணூறு சதவிகித ஆற்றல் சாதாரண மனிதனால் வீணாக்கப்படுகிறது. எனவே தொடர்ந்து அவன் பெரிய தவறுகளைச் செய்துகொண்டே இருக்கிறான். சரியான பயிற்சியைப் பெற்ற மனிதனோ மனமோ ஒருபோதும் தவறு செய்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அதற்கு அர்ப்பணித்துவிடு. ஒருமுறை சன்னியாசிப் பெரியார் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் தமது கடவுள் வழிபாட்டிற்கும் தியானத்திற்கும் எவ்வளவு ஊன்றிக் கவனமும் கருத்தும் செலுத்தினாரோ, அதே அளவுக்கு ஊன்றிய கருத்தோடு தமது பித்தளைச் சமையல் பாத்திரங்களையும் தேய்த்துப் பொன் போலப் பிரகாசம் உள்ளதாகச் செய்துகொள்வார்.

✧ இப்போது நாம் வாழும் வாழ்க்கையில் தூய்மையை எப்படிப் பெறுவது? நாம் அனைவரும் காட்டிலுள்ள குகைகளுக்குப் போய்விடலாமா? அதனால் என்ன நன்மை வந்துவிடும்? மனம் கட்டுப்பட்டு அடங்காவிட்டால், குகையில் வார்வதனால் மட்டும் எந்தவிதப் பயனும் கிடைக்காது. ஏனென்றால், இதே மனம் எல்லாத் தொந்தரவுகளையும் அங்கேயும் கொண்டு வந்து சேர்த்துவிடும். குகையில்தான் எல்லாப் பேய்களையும் நாம் பார்ப்போம். ஏனென்றால் எல்லாப் பேய்களும் நமது மனதிலேயே இருக்கின்றன. கட்டுப்பட்டு மனம் அடங்கியிருந்தால், நாம் எந்த இடத்தில் இருந்தாலும், அந்த இடம் குகையாக ஆகிவிடும்.

நமது சொந்த மனப்பான்மைதான் நமக்கு ஏற்றாற்போல் உலகத்தைத் தோன்றும்படி செய்கிறது. நமது எண்ணங்களே பொருள்களை அழகு பொருந்தியவை ஆக்குகின்றன; நமது எண்ணங்களே பொருள்களை அவலட்சணமாக்குகின்றன. இந்த உலகம் முழுவதும் நமது சொந்த மனதிலேயே அடங்கியிருக்கின்றது. எல்லாவற்றையும் சரியான முறையில் புரிந்துகொள்ளக் கற்றுக் கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி மூச்சு

ஐயா இறைபதம் அடைந்துவிட்டார் ஐயா அப்பாவை எங்கள் குடும்பத்தில் ஐயா என்றே அழைப்போம். ஐயாவின் திருவுடல் உற்றார் உறவினர் சுற்றத்தார் பொதுமக்கள், அஞ்சலிக்காக எமது இல்லத்தில் ஐந்து நாட்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த நாட்களில் ஐயாவின் திருமுகத்தை இறுதியாக ஒரு தடவை பார்த்துவிட வேண்டுமென்ற துடிப்போடு வந்து தரிசித்து சென்ற உள்ளங்களைக் கண்டு பூரித்துப் போனோம்.

பெற்று பெயர் சூட்டி எங்களை ஆளாக்கி அவையிலே முந்தியிருக்கச் செய்தவர் எங்கள் ஐயா !

புதன்கிழமை மாலை ஐயாவுக்கு சிறிது சுகயீனமாக இருப்பதாகச் சொன்னார்கள். நான் பெரிதுபடுத்தவில்லை. ஐயா தான் ஆரோக்கியமாக இருக்கிறாரே என்று......

வியாழக்கிழமை மிகவும் தளர்ந்திருந்தார். காலை நான் பதறிப் போனேன். மருத்துவர் சிறி அவர்களிடம் விளக்கி மருந்து எடுத்துக் கொடுத்துவிட்டு..... கிளிநொச்சியில் தேசிய எழுச்சிப் பிரகடனம் சென்றுவிட்டேன்.

கனடாவில் இருந்து எனது தம்பி யோகன் குடும்பம் வந்திருந்தனர். எனது தங்கையும் பிள்ளைகளும் கொழும்பில் இருந்து வந்திருந்தார்கள். எனக்கு பயம் தோன்றவில்லை. ஐயாவை கவனமாகப் பாருங்கள் என்றேன்.

வியாழக்கிழமை நள்ளிரவு கிளிநொச்சி சமாதான செயலகத்தில் இருந்து தொடர்பு கொண்டபோது ஐயா பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகச் செய்தி சொன்னார்கள். மிகவும் மனம் வருந்தினேன். வெள்ளிக்கிழமை நானும் அருட்சகோதரர் இராசகுமாரும் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம் கடவுளிடம் மிகவும் மன்றாடினேன். ஐயாவின் உடல் நிலை ஆரோக்கியமற்றதாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை ஐந்தரை மணியளவில் ஐயாவின் அருகில் நின்றிருந்தோம் பிள்ளைகள் பக்கத்தில் எங்களைப் பெற்று பெயர் சூட்டி ஆளாக்கி வைத்த ஐயாவின் உயிரை இன்னும் சில காலம் இந்த உடலுக்குள் இறைவன் விடமாட்டாரா என பிரார்த்தித்தோம். அவரது மூச்சு வேகமாக அடித்தது காகம் , குருவி, எதிரி கைபடாமல் காத்த எம் ஐயா எங்களுக்காக உயிர் வாழ்ந்த ஐயா எங்களை விட்டுப் போகப் போகிறார். எங்களால் அங்கு நிற்க முடியவில்லை. தலை சுழன்றது. எங்கள் கண்முன்னாலே ஐயாவின் மூச்சு நின்றது. எவ்வளவு கொடுமை. வைத்தியர்கள் வந்தார்கள் நின்ற மூச்சை மீண்டும் இயக்க முயற்சித்தனர். அதில் தோற்றுப் போய் சென்றார்கள். எங்களைச் சுற்றி நின்ற பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கத்தினர், கதறினர். நிலையாமை பற்றி ஐயா அடிக்கடி பேசுவார். அது இப்போது நடந்துள்ளது. அதற்கு மேல் எங்களால் ஒன்றும் நடப்பதற்கில்லை.

எங்கள் ஐயாவின் பெருவாழ்வு எம்மை இந்த மண்ணில் தலை நிமிரச் செய்தது. எங்களுக்கு உயிர் கொடுத்து உலகியல் ஆதாரங் களைத் தந்தது. அவரது மறைவு குறித்து பல பெரியோர்களால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு தொகுத்து எமது குடும்பத் தலைவனுக்கு ஒரு நினைவு மலரை காணிக்கையாக்கி யுள்ளோம். இதனை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**அன்புடன்**
**மகன்**
**ப.கனகலிங்கம்**

## பொறுமை

- *குறையாத பொறுமை, சந்தர்ப்பங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் மனம் தவறான செய்கைகளைப் பலமாகக் கண்டனம் செய்யும் மனப்பான்மை, தவறு செய்தவர்களிடமும் தயை காட்டும் தன்மை ஆகியவையே ஆகும்.* *-மாத்யூ ஆர்னாவ்டு*
- *ஒருவன் பரிபூரணமானவனாக இருக்க, அவனிடம் இரண்டு குணங்கள் நிலை பெற்றருக்க வேண்டும். அவை யாவன: அன்பும், மரியாதையும் ஆகும்.* *- புல்வர்*
- *மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படுவது மனித குணம் ஆகும்.*
- *மறறவர்கள் படும் துன்பத்தை நீக்குவது தெய்வ குணம் ஆகும்.* *- ஷோரெஸ்மான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையை தன் உயிர்மூச்சு எனக் கொண்டு வாழ்ந்த நாகமுத்து பரராசசிங்கம் அவர்களின் மறைவு எமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

திரு.நாகமுத்து பரராசசிங்கம் அவர்கள் புங்குடுதீவைத் தன் பிறப்பிடமாகக் கொண்டவர். புங்குடுதீவு என்பதற்கு பலர் பல விளக்கங்கள் வழங்குகின்றனர். புங்க மரங்கள் இருந்ததனால் அது புங்குடுதீவு எனப்பெயர் பெற்றது என்பது ஆய்வாளர் கருத்து. அது ஒரு காலத்தில் சீரோடும் சிறப்போடும் விளங்கியதனால் அதற்கு பொன்கொடு தீவு எனவும் சிலர் விளக்கம் வழங்குகின்றனர். இவ்விரு கருத்துக்களிலும் உண்மையிருக்கலாம். ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் விலைபோக மறுக்கின்ற எம்மை காக்கும் தெய்வமாக விளங்கும் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பெண் கொடுத்த தீவாகவே புங்குடுதீவு விளங்குகிறது. பேரொளியாக விளங்கும் பிரபாகரனுக்கு மேலும் ஒளியூட்டும் மதியொளியாக மதிவதனி விளங்குகிறாள். இப்புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.நாகமுத்து பரராஜசிங்கம் அவர்கள் 13.6.1927 இல் தோன்றி தனது 78ஆவது அகவையில் புங்குடுதீவில் தான் முறையாக வாழ்வு பெற முடியாத நிலையில் 02.09.2005 திகதியில் அவர் உயிர் பிரிந்தது. இலங்கையில் ஏற்பட்ட இனப்படுகொலை காரணமாக மீண்டும் அம் மண்ணில் வாழ்வு பெற முடியாத நிலையில் கொக்குவில் மண்ணில் அவர் மறைந்தார். அவர் தன் மண்ணோடும் மக்களோடும் ஒட்டிவாழ விரும்பியும் அவ்வாழ்வு அவருக்கு கிடைக்கவில்லை.

அவருக்கு மட்டுமல்ல எம்முள் பலருக்குக் கூட எம்மண்ணோடு, மக்களோடு பின்னிப் பிணைந்து வாழ முடியாத நிலையில் உலகெங்கணும் சிதறுண்டு வாழ்கிறோம். எனவேதான் தமிழன் வாழாத நாடில்லை ஆனால் தமிழனுக்கு என்றொரு நாடில்லை என்ற ஏக்கக் குரல் எங்கும் எழுந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.நாகமுத்து பரராசசிங்கம் அவர்கள் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த போதும் உலகின் தலைசிறந்த இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ள திருமலையில், இயற்கை கொஞ்சிக் குலாவும் குரைகடல் ஓதி நித்திலங்கொழிக்கும் கோணமாமலையில் எம் தாயினும் நல்ல தலைவன் குடிகொண்ட அம்மண்ணில் அவரது வாழ்வின் பெரும் பகுதி கழிந்தது. திருகோணமலையில், உப்புவெளியில் அங்குள்ள மக்கள் அனைவரும் உவந்தேற்றும் முறையில் இவர் ஓர் வணிகராக வளத்துடன் வாழ்ந்தார். மக்களுக்கு வாரிவழங்கும் பாரி வள்ளலாகவும் விளங்கினார். இவருடைய அண்ணன் உப்புவெளிக் கிராமத்தின் கிராமசேவைத் தலைவராகவும் மக்கள் மதித்துப் போற்றும் முறையில் தன் வாழ்வை நடாத்தியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவரும் இவர் அண்ணர் கைலாசநாதரும் வணிகத்துறையில் ஈடுபட்டபோதும் மக்களோடு மக்களாக அன்று தமிழ் மக்கள் நடாத்திய அனைத்து விடுதலைப் போராட்டங்களிலும் பங்கு கொண்டு வரலாற்றில் தம் பெயரைப் பதித்துள்ளனர். தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் இவரின் வீரதீர செயல்களைத் தியாக உணர்வினை இன்னும் உவந்து போற்றியபடி இருக்கின்றனர். "உப்புவெளியில் வாழ்ந்த இவர் உப்பிட்ட வரை உள்ளளவும் நினை" என்று பேசுமளவிற்கு அப்பூமியின் உப்பாக விளங்கியவர். இவரின் வாழ்க்கைத் துணைவி சின்னப்பிள்ளை இவரது சிந்தை கவர்ந்த இல்லக் கிழத்தியாக விளங்கி தமிழினத்தின் எண்ணிக்கையில் ஏற்றம் விரும்பி 10 குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இவர்களில் மூவர் இப்போது உயிருடன் இல்லை. எனினும் எழுவர் வாழ்கின்றனர். அந்த ஏழு பேரில் ஐவர் கனடாவில் சீரோடும் சிறப்போடும் வாழ்கின்றனர். ஒரு பெண் மகள் கொழும்பில் அமைதியான நல்வாழ்வை ஏற்று நலம்பல பெற்று வாழ்கிறார். மறைந்த திரு. பரராஜசிங்கம் அவர்களின் பிள்ளைக்கனி தீர்த்த பேரமுதாக விளங்குபவர் நமது கனகலிங்கம் அவர்கள். இவரைப் பேரமுது என்னும் ஆரமுது என்றும் இன்றும் எத்தகைய அடைமொழிகளைக் கையாளினும் இவரின் தொண்டுள்ளத்திற்கு வரையறை வகுத்தல் கடினமாகும். "தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசன் பாடலையும் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரின் அருள் மொழியையும், நினைவுபடுத்தும் வகையில் என்றும் புன்முறுவலுடன் இவர் ஆற்றும் பணிக்கு எல்லை வகுத்தல் கடினம்.

திரு. கனகலிங்கம் அவர்கள் அவையத்து முந்தியிருக்கும் அறிஞராக விளங்குவதுடன், "இவன் தந்தை எந் நோற்றான் கொல் எனும் சொல்" எனக் கூறுமளவிற்கு குறள் வரிகளை நினைவுபடுத்துவதாக விளங்குபவர். திரு.பரராசசிங்கம் பெற்றெடுத்த அனைத்து பிள்ளைகளும் குடும்பத்திற்கு புகழ் சேர்க்கும் முறையில் நல்வாழ்வு வாழ்கிறார்கள். ஆனால் திரு. கனகலிங்கம் அவர்களுடைய வாழ்வு தமிழ்மக்கள் அனைவரையும் கவர்ந்துள்ள வாழ்வாக விளங்குகிறது.

ஒருவரின் பெருமை அவரவர் எச்சத்தால் காணப்படுகிறது என்று குறள் கூறுகிறது. குறள் கூறும் எச்சம் எனும் சொல் எதனைக் குறிக்கிறது என்பதையொட்டி அறிஞரிடையே கருத்துமோதல் உண்டு, என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் வள்ளுவர் குறிக்கும் எச்சம் எனும் சொல் திரு. கனகலிங்கம் அவர்களுக்கு பொருத்தமான சொல்லாக விளங்குகிறது.

திரு. பரராசசிங்கம் அவர்கள் மூன்று கால்நூற்றாண்டோடு மேலும் 3 ஆண்டுகளைச் சேர்த்து தன்வாழ்வை முடித்துக்கொண்டார். நிலையாமை ஒன்றுதான் நிலையானது எனினும் திரு. பரராஜசிங்கம் அவர்கள் நிலைத்த புகழோடு வாழ்ந்து தன் வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டுள்ளார். திருமலையைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு விளங்கிய திரு. பரராஜசிங்கம் அவர்களின் மறைவு தமிழீழத்திற்கு பேரிழப்பு, திருமலைக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. மீண்டும் அவருக்குப் பிறப்புண்டேல் திருமலையிற் பிறந்து, திருமலை மண்ணைக் காக்க வேண்டும் என்பது எமது விடுதல் அறியா விருப்பம். அதுவரை அவரது இன்னுயிர் அமைதிகாண இறை துணைநிற்க.

**மா.க.ஈழவேந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகமுத்து பரராசசிங்கம் பல வழிகளிலும் சிறப்பு பெறுகிறார்

வாழ்க்கையில் பல வழிகளிலும் சிறப்புப்பெற்ற அமரர் திரு.நாகமுத்து பரராசசிங்கம் அவர்களின் சிறப்புக்கள் இரு வகைகளில் விஞ்சி நிற்கின்றன.

ஒன்று வர்த்தகத்துறையில் அவர் ஆற்றிய சாதனை அவரை பிரபல வர்த்தகப் பட்டியலில் உள்ளீர்த்தது. மற்றைய சிறப்பு அவர் பிள்ளைகளால் பெற்ற சிறப்பு. உலகம் போற்றும் திருக்குறளில்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்"

என வரும் வெண்பாவிற்கு இணங்க பிள்ளைகளை அவர் வளர்த்த வளர்ப்பு இன்று பிள்ளைகளால் அவர் சிறப்புப்பெறுகின்றார்.

அவரது பிள்ளைகளில் குறிப்பாக திரு.கனகலிங்கம் அவர்களை எனக்கு நன்கு தெரியும். தனது வாழ்வின் பெரும் பகுதியை சமூகத் தொண்டுக்காகவே அர்ப்பணித்தார். அவர் நினைத்தால் வெளிநாடுகளில் வாழும் தன் உறவுகளுடன் ஒன்று சேர்ந்து வாழமுடியும். ஆனால் இங்கிருந்தே சமூகத்தொண்டு ஆற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவர் பணியாற்றி வருகின்றார். இவ்வாறான நல்லெண்ணங்கள் வளர்ப்பிலேயே இவரிடம் விதைக்கப்பட்டுள்ளது. இவருக்கு வழங்கப்படும் பெருமைகள் அனைத்தும் இவரை வளர்த்து ஆளாக்கிய தந்தையையே சாரும். அந்த வகையில் இவன் தந்தை என்ன தவம் செய்தாரோ? என்று சொல்வதற்கு பாத்திரமான திரு.நாகமுத்து பரராஜசிங்கம் அவர்களது பாடத்தை சுற்றம் சூழல் மற்றும் தமிழ் மக்கள் அனைவரும் கவனமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக

**திருமதி.பத்மினி சிதம்பரநாதன்**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**யாழ்.மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியார் "சொக்கர்" பரராஜசிங்கம் நினைவு நிலைக்க பணி செய்வோம்

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும், புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான திரு.கனகலிங்கத்தின் தந்தையார் நாகமுத்து பரராசசிங்கம் அவர்கள் "செப்ரெம்பர் - புரட்டாதித் திங்கள் 2ஆம் நாள் இவ்வுலகை விட்டுப் பிரிந்துவிட்டார். என்ற செய்தி எமக்குப் பெரும் கவலையை ஏற்படுத்திவிட்டது.

புங்குடுதீவு பெற்றெடுத்த பெரியார் பரராசசிங்கம் எல்லோராலும் "சொக்கர்" என்று அன்போடு அழைக்கப்பட்டவர். புங்குடுதீவுக்கென்று பலரும் போற்றும் தனித்துவம் ஒன்றுண்டு. பற்றும் பாசத்தோடும் பழகும் இயல்பு; விருந்தோம்பும் பண்பு; ஈடுபாடு கொண்ட இடத்திலும், அத்துறையிலும் கடின உழைப்பு; பொதுவாழ்விற்கு அர்ப்பணம்; கொள்கைப் பிடிப்பும் இலட்சியப் பற்றும் கொண்டிருப்பது திரை கடலோடியும் திரவியந் தேடு" என்பதற்கிணங்க உழைத்துச் செல்வம் தேடுதல், தேடிய செல்வத்தில் ஒரு பகுதியேனும் பொதுத் தொண்டிற்கு உவந்தளித்தல் அம்மண்ணிற்குத் தனித்துவத்தையும் சிறப்பையும் தருகின்ற தனிப் பண்புகளாகும்.

பெரியார் "சொக்கரும்" தான் பிறந்த மண்ணின் மேம்பாட்டுக் கு மட்டுமல்ல வர்த்தகத்தின் பொருட்டுத் திருகோணமலையில் வாழ்ந்த பொழுதும் அங்கும் வர்த்தகத்திலும் பொது வாழ்விலும் பெயர் பதித்தவராயிருந்தார்.

அவரின் சகோதரன் கைலாயநாதா திருமலை உப்புவெளிப் பிரதேச சபையின் தலைவராகத் தெரிவு பெற்றுத் திகழ்ந்தார் என்றால் சென்ற இடத்தையும் வென்று முத்திரை பதித்து நின்ற குடும்பப் பெருமை புங்கை மண்ணையும் சாருமன்றே! "சொக்கரின்" செல்வமும், செல்வாக்கும் திருமலையிலும் பரவியிருந்ததெனலாம். இது தமிழுக்கும் தமிழ் உலகுக்கும் பெருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பெற்றெடுத்த பிள்ளைகள் கனடா நாட்டிலும் கல்வியிலும், உழைப்பிலும் உயர்ந்து நிற்பது மேலும் பெருமை சேர்ப்பதாகும். அவ்வாறே அன்னார் பெற்றெடுத்த மூத்த புதல்வன் கனகலிங்கமும் தமிழ் மண்ணில் பொதுத் தொண்டிலும், கூட்டுறவுத் துறையிலும், தமிழ்த் தேச மக்கள் தமிழரசு இலட்சியப் பாதையிலும் அர்ப்பணித்து உழைப்பது புங்கை மண்ணையும், சொக்கர் பாரம்பரியத்தையும் மேம்படுத்தி நிற்கின்றது.

"சொக்கர் " நினைவு நிலைத்து நிற்க நாம் தொண்டு செய்வோம். அவர் ஆத்மா சாந்திக்கு அதுவே வழியாகும்.

மாவை.சோ.சேனாதிராசா. பா.உ
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

## கண்ணீர் அஞ்சலி

**யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கச் சமாசம் புங்குடுதீவு நயினாதீவு பல.நோ.கூ.சங்கம் ஆகியவற்றின் தலைவர் திரு.ப.கனகலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை**

# நாகமுத்து பரராசசிங்கம்

**அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம்.**

*நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம்*
*நெடுந்தீவு (சி.45046)*

**தலைவர் , பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டம் மாறி வாழ்ந்த போதும் தமிழ் மக்களுக்காக வாழ்ந்த சிங்கம்

எம் எல்லோரது அன்பிற்கும் பாத்திரமான அமரர் நாகமுத்து பரராஜசிங்கம் ஐயாவின் இறைபதம் அடைந்த செய்தி மிகுந்த வேதனையைத் தந்தது. யாழ் மாவட்டத்தில் பிறந்து தமிழர் தேசத்தின் தலை நகர் எனப்போற்றப்படும் திருமலையில் வாணிபத் தொழிலுக்காக வாழ்ந்து தமிழை வளர்க்கவும், தமிழ்த் தேசத்தை விடுவிக்கவும் அயராது உழைத்த பெருமகன்.

முப்பது வருடத்திற்கு மேலாகத் திருமலையில் ஓர் குடும்பத்தின் சகோதரர்கள் கூடி வாணிபத் தொழிலில் ஈடுபட்ட போதும், தமக்குக் கிடைக்கும் நேரங்களில் எல்லாம் தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழ்த் தேசிய இனத்தின் விடிவிற்கும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை தடுத்தும், தமிழர் நிலம் காக்க உழைத்தவர்கள். உப்புவெளிப் பிரதேச சிங்கள ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த தனது சகோதரர் கைலாசநாத ருடன் சேர்ந்து தீவிரமான முயற்சியில் ஈடுபட்டதன் மூலம், அப்பிரதேச மக்களின் மனங்களில் இன்றும் நிலைத்து நிற்பதை உணரமுடிகின்றது.

தாம் திருகோணமலையில் வசித்த காலத்தில் திருகோணமலை யை தலைநகராகக் காணத்துடித்தவர். தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களாக இணைந்து, இலட்சியப்பற்றுடன் தமிழ் தேசியத்தை வலுவூட்ட உழைத்த பெருமை இவருக்கு உண்டு. தமிழர்கள் தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழும் காட்சியைக் காண வேண்டும் எனும் இலட்சியத்துடன் செயற்பட்டவர்.

தாம் வாழ்ந்த வழியில் தம் பிள்ளைகளையும் வளர்த்து, தமிழ் தேசிய விடுதலைக்கு உழைக்கும் உத்தமர்களாக எம்மிடத்தே விட்டு தம்வாழ்வை முடித்துக் கொண்ட பெருமகனின் இழப்பு, தமிழ் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனங்களில் மனவேதனையை ஏற்படுத்தியமையை உணர்கின்றோம். உத்தமராய், மானமுள்ள தமிழராய், தமிழ் மண் காக்க உழைத்த பெருமகனாய், சிங்களத்தை எதிர்த்த சிங்கமாய், வாழ்ந்து காட்டிய அவரின் இலட்சியக் கனவை நனவாக்க நாமெல்லோரும் உழைப்பதே காலத்தின் தேவை. அதுவே அவரின் ஆத்மா சாந்திக்கு வழிகாட்டும்.

**இப்படிக்கு,**<br>
**மக்கள் சேவையிலுள்ள,**<br>
**கி. சிவநேசன் (பா.உ)**<br>
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

## ~~~~ மாபெரும் நற்பாக்கியம் ~~~~

- *எந்தக் காரியத்தைச் செய்தால் பின்னால் மனம் மகிழ்வுறுமோ, எதன் பலனை மனத்தாலே உற்சாகத்தோடு அனுபவிக்க முடியுமோ, அதுவே நற்செயல் ஆகும்.*
- *தாயையும் தந்தையையும் ஆதரிப்பது, மனைவியையும் போற்றுவது, அமைதியாக மனத்தாலே வாழ்க்கையை நடத்துவது இவைதான் மாபெரும் நற்பாக்கியமாகும்.*
- *நன்றி உணர்வுதான் நெருங்கிய உறவாகும்.*

~~~~ ~~~~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~

அமரர் நாகமுத்து பரராசசிங்கம் [சொக்கர்]

# ஆற்றிய பணி காலத்தால் அழிக்க முடியாதவை...

தமிழ் மண்ணில் பிறந்து தேசப் பற்றுடன் வாழ்ந்து தமது கடமைகளை சரிவர ஆற்றி வாழ்வை நிறைவு செய்து கொண்ட அமரர் நாகமுத்து பரராசசிங்கம் பெரியாரின் சாவு நாட்டிற்கு ஓர் பேரிழப்பாகும். அவரது மறைவு எங்களுக்கு மிகுந்த கவலையளித்துள்ளது.

தேசிய விடுதலைக்கு அளப்பெரும் பங்களிப்பை அளித்து வரும் புங்குடுதீவில் அமரரும் அவதரித்தார். இளவயதிலே அரசியல் சமூகப் பணிகளில் ஈடுபட்டு அனைவரையும் கவர்ந்திருந்தார் (சொக்கர்) என்ற பெரியார்.

திருமலையில் வர்த்தகத் தொழில் நடாத்தி நீண்ட காலம் பெரும் நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்தார்.

50,60ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் தமிழ் விரோதப் போக்கு என்பன தலைவிரித்தாடியது. திருமலையில் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகச் செயற்பட்டு தமிழ் மக்களின் மனங்களிலே நீங்காத இடத்தைப் பிடித்தார்.

தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்களாகச் செயற்பட்டு சிங்களவர்களிடம் திருமலை மண் பறிபோகாமல் இருக்க தீவிரமாகச் செயற்பட்டார். உப்பு வெளியில் பிரபல்யமான வர்த்தக நிறுவனமாக யஃங்னா ஸ்டோர்ஸ் இயங்கியது. இங்கிருந்துதான் பல அரசியல் சமூகப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

அந்தக் காலத்திலேயே பல இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தீவிரமாக இயங்கினர். அதில் அமரர் பரராசசிங்கம் ஒருவராவார். தீவிரமான அரசியல் ஈடுபாடு கொண்ட அமரரின் சகோதரர்கள் முக்கியமான பதவிகளை வகித்தார்கள். திருமலையில் மட்டுமல்லாமல் தனது பிறந்த இடத்திலும் பல சமய சமூகப் பணிகளை முன்னின்று நடாத்தி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதாகிவிட்டபோதும் தனது இறுதி மூச்சை நிறுத்தும்வரை தேசியம், விடுதலை தமிழுணர்வுவோடே வாழ்ந்தார். தனது இறுதி நாட்களில் தனது சொந்த வீட்டில் வாழ விரும்பினார். ஆனால் அவரது வீடு கடற்படைத் தளமாக இருந்ததால் அவரால் செல்ல முடியவில்லை. அது அவருக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

நான் சில வேளையில் அவரது வீடு செல்லும் போது அவருடன் உரையாடியிருக்கிறேன். அவரது மூச்சு தமிழீழம் காணவே துடித்தது. அதை அவரால் காண முடியாத ஏக்கத்துடன் சென்றுவிட்டார். ஆயினும் அவரது கனவுகளை பிள்ளைகள் நிறைவேற்றுவர். குறிப்பாக தேசிய போராட்டத்திற்கு உழைத்து வரும் அவரது மூத்த மகன் கனகலிங்கம் போன்றவர்கள் துணையாக நிற்பார்கள் எனக் கூறி அமரரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு தமிழீழத் தேசியக் கூட்டமைப்புச் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ.கஜேந்திரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ் மாவட்டம்.**

# கண்ணீர் அஞ்சலி

## தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகத்தின் ஸ்தாபகர் திரு.ப.கனகலிங்கம் அவர்களது அருமைத் தந்தை

# நாகமுத்து பரராசசிங்கம்

**அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திநருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**தீவக மக்கள் அபிவிருத்தி**
**நலன் காப்பகம், வேலணை.**
(39676)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை மக்களின் சமூக சேவையாளரின் ஆத்மா சாந்தியடைக....

புங்குடுதீவில் பிறந்து திருகோணமலையில் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்த அமரர் நாகமுத்து பரராசசிங்கம் சிறந்த மனிதர் பல சமய சமூகப் பணிகளில் அருந்தொண்டாற்றினார். பெறுதற்கரிதான மானிடப் பிறவியைப் பெற்று அந்த மனித வாழ்வை அர்த்தமுடைய தாக்கித் தனது பணியை நிறைவு செய்துள்ளார்.

இளவயதில் இருந்தே சமூகப் பணிகளில் மிகுந்த ஈடுபாடுடைய வராகவே காணப்படுகிறார். பிறருக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ளார். மிக இளவயதிலேயே தொழில் நிமிர்த்தம் காரணமாக தமிழரின் தலைநகரம் திருகோணமலை சென்றார். அங்கு திறம்படத் தன் வர்த்தகத்தைச் செய்ததோடு சேர்ந்த செல்வத்தைப் பொதுச் சேவையில் செலவழித்தார். பிறந்த இடத்திற்கும் வாழ்ந்த இடத்திற்கும் அரும் பணியாற்றினார்.

திருகோணமலையில் தன் வாழ்நாளில் அரைவாசிப் பகுதியை செலவழித்திருக்கின்றார். அங்கு தமிழ் மக்களின் அரசியல் விடிவுக்காக அயராது உழைத்திருக்கிறார்.

திருகோணமலை உப்புவெளியில் மிகவும் சிறப்போடு வாழ்ந்தவர்கள் அவரது சகோதரர்கள் அனைவரும் சமூகத் தொண்டாற்றினர். திருமலை உப்புவெளி கிராமசபைத் தலைவராக இவரது சகோதரர் கைலாசநாதர் தெரிவுசெய்யப்பட்டார். அரசியல் சமூகப் பணிகளில் மிகவும் கண்ணியமாகச் செயல்பட்ட ஒருவரின் இழப்பு மிகவும் ஈடு செய்ய முடியாததொன்றாகும்.

தம் வாழ்க்கையில் பலதையும் பெற்று நல்ல பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மன நிறைவோடு தனது வாழ்வை முடித்துக் கொண்டுள்ளார். அவரது பிள்ளைகள் உள்நாட்டிலும், கனடாவிலும் சீரும் சிறப்போடும் வாழ்கின்றார்கள். தன் வாழ்க்கையையும் பாராது நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுக்காக உழைக்கும் கனகலிங்கம் போன்ற நற்பிள்ளைகள் பெற்று ஆளாகுவதன் மூலம் அவருடைய உணர்வு வெளிப்படுகிறது.

மிகவும் பண்பானவர். எதையும் இலகுவில் செய்து முடிப்பதில் வல்லவர். யாருக்கும் தீங்கு செய்யாத மன நிலையை உடையவர். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

K.கணேஸ்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்
24.09.2005.

## மன அமைதி பெற

- *மகனே உனக்கு மன அமைதி வேண்டுமானால் உலகத்தவர் மீது குறை கூறாதே.*
- *மற்றும் உன்னிடத்திலுள்ள குறைகளைக் கிளறிப்பார். உலகம் முழுவதையும் உன்னுடையதாக ஆக்கக் கற்றுக் கொள்.*

*-சாரதாதேவி.*

## மற்றவர் தவறுகளை மறக்க

- *நாம் செய்த தவறுகளை நாம் நினைத்துக் கொண்டிருக்கும் போது, மற்றவர்களுடைய தவறுகளை மறந்து விடுவோம், மன்னித்து விடுவோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகமுத்து பரராசசிங்கம்

புகழ் பூத்த வணிகப் பெருமகனும், தாயகப் பற்றாளருமாகிய திருவாளர் நாகமுத்து பரராசசிங்கம் அமரரான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன்.

திருகோணமலை திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்தின் மூலம் சிங்களவர் பெரும்பான்மையாகி தமிழர் சிறுபான்மையினராக மாற்றியமைக்கும் அரச சூழ்ச்சிகளை அன்றே இனங்கண்டு அதனைத் தடுக்க பாடுபட்டவர். ஒரு கை ஓசை எழுப்பாது. ஆதலால் அவரின் முயற்சி போதிய ஆதரவைப் பெறமுடியாமல் போய்விட்டது.

அவர் மட்டும்மல்ல அவரின் புதல்வர்களும் தாயக விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்து செயலாற்றி வருகின்றனர். நண்பர் கனகலிங்கம் அவரின் புதல்வர்களில் ஒருவர். அன்னார் நயினாதீவு புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத் தலைவராகவும், யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவராகவும் மட்டுமல்லாது தாயக சுயநிர்ணய போராட்டத்தில் ஒரு தோழனாக தன் பங்களிப்பைச் செய்து வருகின்றார்.

அமரர் நா. பரராஜசிங்கத்தின் மறைவு தேசப்பற்றுள்ள அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்தை தோற்றுவித்துள்ளது. அன்னாரின் மறைவுக்கு வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலும், எனது சார்பிலும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**தலைவர்**
**வலி–கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**நீர்வேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வலம் வந்து தன் கடமைதனை செய்வார்

புங்குடுதீவு மடத்துவெளி ஏழாம் வட்டாரத்தில் அமைந்திருக்கும் வயலூர் பாலசுப்பிரமணியப் பெருமானின் திருவருள் துணை கொண்டு அருகாமையில் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் அமைய வாழ்ந்த அமரர் பரராஜசிங்கம் அவர்களை இங்குள்ள மக்கள் அன்போடும் பண்போடும் சொக்கர் அப்பா என்று அழைப்பார்கள். இவர் காலை எழுந்தவுடன் பாலசுப்பிரமணியர் ஆலயத்தை வலம் வந்து வணங்கி தன் கடமைகளைச் செய்வார் முருகனின் மஹோற்சவ காலங்களில் இடம்பெறும் திருக்கல்யாண வைபவத்தின் உபயமாக பலகாலம் சிறப்பாக நடாத்தி வந்தார் அண்மையில் இடம்பெயர்வு காரணமாகவும் மடத்துவெளி வீட்டில் வந்திருக்க முடியாத காரணமாகவும் கொக்குவிலில் சிலகாலம் வசித்து தன் வாழ்வை நிறைவு செய்துள்ளார் இவரது நினைவுமலராக அமையும் நூலுக்கு பல மரங்களிலிருந்து மலரும் பல மலர்கள் ஒன்றிணைந்து ஒரு மாலையாக அமைவது போல் பல மனித உள்ளங்களில் மலர்ந்த கருத்துக்கள் திருமுறைகள் ஒன்றிணைந்து அறிவுமலர் மாலையாக அமைந்து அனைத்து உள்ளங்களுயும் மலரவும் இவரின் ஆன்மா பாலசுப்பிரமணியர் திருவடித் தாமரையை இணையவும் பிரார்த்தித்து இம் மலர் சிறப்பாக அமைய ஆசி கூறுகிறேன்.

**சிவ-மனோகரராசக்குருக்கள்**
**ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில் குரு**
**புங்குடுதீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகமுத்து பரராஜசிங்கம்

"நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உறைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்றே"

மரணம் என்பது இயற்கை. ஆனால் அது சொல்லாமல் கொள்ளாமல் திடீரென வந்து பிரியமானவர்களை, நல்வர்களைக் கொண்டு செல்லும் போது அது எமக்கு வேதனையைத் தருகின்றது. அந்த வகையில் அமரர் நாகமுத்து பரராசசிங்கம் ஐயா அவர்களது இழப்பானது அவருடைய சொந்த ஊருக்கு மாத்திரமல்ல சில காலம் வாழ்ந்த திருகோணமலை மக்களாகிய எமக்கும் ஓர் பேரிழப்பாகும். ஏனெனில் 1950ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் திணிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களையும் ,தமிழ் மக்கள் மீதான சுரண்டல்களையும் தன்னுடைய சகோதரனாகிய முன்னாள் உப்புவெளி கிராம சபைத் தலைவராக இருந்த அமரர். கைலாசநாதனுடன் சேர்ந்து அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார் என்பதை நாம் மறந்துவிடலாகாது. அதுமாத்திரமின்றி திருக்கோணேஸ் வரம், புராதன தலமாக விளங்கும் கன்னியாய் வெந்நீறூற்றுப் பகுதிகளிலும் சமய, சமூகப் பணிகளை தன்னால் இயன்றளவு செய்த ஒருவர். தன்னுடைய வயோதிபப் பருவத்திலும் தன்னுடைய அயலவர், நண்பர்கள், சுற்றத்தாருக்கு தன்னால் இயன்ற உதவிகளையும், ஆறுதல்களையும் நல்கிய ஒரு அன்பர். இறுதிக் காலத்தை முன்னரே அறிந்து அதற்கமைய தன்னுடைய காரியங்களைச் செய்து முடித்த ஒரு அறிவாளி. இதனையே நன்னெறி,

"கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங்கனிந்தறஞ் செய்து உய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு"

என்று கூறுகின்றது. எனவே அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் வண பிதா.இ.ராஜ்குமார்
தென்னிந்திய திருச்சபை, கொக்குவில்.

சிவகிரி, திருகோணமலை.

# மறக்க முடியாதவர் – சொக்கர் ஐயா

"சொக்கர்" என்று செல்லமாக அழைக்கப்படும் உயர்திரு.நாகமுத்து பரராஜசிங்கம் அவர்கள் திடீரென காலமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் திருமலையில் வர்த்தகராகவும் இறுதிக் காலத்தில் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்த அமரர் அவர்கள் நாடறிந்த பேராளன். நற்குணசித்திரன். அமரரும் நானும் கடந்த மூன்றாண்டு களாக விடியற் காலையிற் சந்தித்து அளவளாவும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அதாவது இருவரும் காலையில் முதல் வேலையாக தினசரி பத்திரிகையை வாங்குவதற்கு குளப்பிட்டிச் சந்தியில் ஒன்று கூடுவோம். அரசியல், நாட்டு நடப்பு, எம்மூர்ப் புதினங்களைப் பகிர்ந்து கொள்ளுவோம். ஆனால் அமரராவதற்கு மூன்று நாட்களாக நான் அவரைக் காணவில்லை. அவர் ஊருக்கோ,. வெளியூருக்கோ சென்றிருக்கலாம் என நினைத்தேன். ஆனால் அவர் அமரராகிவிட்டார் என்ற செய்தி கேட்டு மிகவும் மனம் வருந்தினேன். என்ன செய்வது. பிறப்பவர்கள் யாவரும் இறப்பது என்பது நியதி. இது தவிர்க்க முடியாதது. ஆனால் சுகதேசியாகவிருந்த திரு.பரராஜசிங்கம் ஐயா அவர்கள் அமரர் ஆவார் என நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அமரர் அவர்கள் தனது குடும்பத்தவர்களையும் பின்ளைகளையும் நல்ல நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார். அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக மூத்த மகன் திரு.ப.கனகலிங்கம் அவர்கள் தமிழ்த் தேசியத்துக்காகவும் தமிழர் தாயகத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்து அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகின்றார். அவர் ஆற்றிவரும் இப்பணி சிறப்பதற்கு அமரரின் ஆசீர்வாதம் என்றும் இருந்து வந்துள்ளது என்பதை நாம் அறிவோம்.

அன்னாரின் ஆத்மா புங்குடுதீவு, துறைமுக வாயில், மடத்துவெளி வீரகத்தி விநாயகர் பாதார விந்தத்தில் சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பேராசிரியர் கா.குகபாலன்
தலைவர், புவியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டத்துவெளி சொக்கப்பா....!

உயர் வேளாண் குலத்தில் பிறந்து நல்ல மனைவி நல்ல பிள்ளைகளோடு வாழ்ந்து தாம் பிறந்த நாட்டிற்கும் ஆலயங்களுக்கும் மக்களுக்கும் தொண்டாற்றிப் பெருமை பெற்றவர். இவரது மகன் திருவாளர் கனகலிங்கம் அவர்கள் தமது இளம் வயதிலேயே நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்து சமூகத் தொண்டு சமயத் தொண்டுகள் செய்து பல சங்கங்களின் தலைவராகவும் புங்குடுதீவு நுழை வாசல் வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகச் செயலாளராகவும் கடமையாற்றி 1989ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தை நடாத்திய சிறப்பு அவரைச் சார்ந்ததாகும். இன்னும் பல ஆலயங்களுக்கு சமயத் தொண்டுகள், உதவிகள் புரிந்தமை குறிப்பிடத்தக்கது. அப்படியான பெருமைகள் உள்ள புதல்வரைப் பெற்ற பெருமை திரு சொக்கப்பா அவர்களையே சாரும்.

இப்படிப் புகழ் பெற்று வாழ்ந்த சொக்கப்பா அவர்கள் தனது 78 ஆவது வயதில் காலமாகிவிட்டார் என்பதை கேள்வியுற்று மிகவும் கவலையடைந்தேன். அவர் இறப்பதற்கு ஒருமாதம் முன்பு என்னோடு நன்றாகக் கதைத்து உரையாடினார். மரணம் எல்லோருக்கும் நிச்சயம். அதையிட்டு நாம் மனம் தேற வேண்டும்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல நுழைவாசல் பிள்ளையாரை வேண்டுவோமாக.

அவர்தம் குடும்பத்தினருக்கும் பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள் எல்லோருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இங்ஙனம்**

**வங்களாவடி,**
**வேலணை**

**சிவாகம கிரியா பூஷணம்**
**ந.மகேஸ்வரக்குருக்கள்**
**நுழைவாசல் வீரகத்தி விநாயகர் ஆலயம்**
**புங்குடுதீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

புங்குடுதீவு மடத்துவெளியில் பிறந்து மிகநீண்டகாலம் திருகோணமலையில் வர்த்தகத் தொழில் புரிந்து வந்த எல்லோராலும் "சொக்கர்" என அன்பாக அழைக்கப்பட்ட நாகமுத்து பரராஜசிங்கம் கொக்குவில் மேற்கில் வசித்து வந்த போது 02.09.2005 அன்று இறைவனடி சேர்ந்தமை குறித்து மிகவும் மனவேதனை அடைந்தேன்.

தந்தைசெல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சிக ளின் ஆரம்பகால உறுப்பினரான இவர் பிரபல சமூக சேவையாளராகவும் திகழ்ந்து வந்தார். திருகோணமலையில் அவர் செய்து வந்த வர்த்தகத் தொழிலை அவரது மூத்த மகன் கனகலிங்கம் புனிதமான கூட்டுறவுத் துறையில் காலடி எடுத்து வைத்து புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினதும், யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினதும் யாழ் மாவட்ட கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபை ஆகியவற்றின் தலைவராக இருந்து செயற்பட்டு வருகிறார்.

தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அரசியலிலும் சமூக சேவையிலும் ஈடுபட்டுவரும் எனது கூட்டுறவு நண்பன் கனகலிங் கத்திற்கும், அவரது சகோதரர்களுக்கும், திருமதி பரராஜசிங்கத்திற்கும் ஆறுதல் கூறி எனது மனத்துயரைப் பகிர்ந்து கொள்கிறேன்.

அமரர் நாகமுத்து பரராஜசிங்கத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தலைவர்**

**யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி ஆதங்கம்

திரு.நாகமுத்து பரராசசிங்கம் அவர்களின் மறைவு துன்பம் தரும் ஒரு நிகழ்வாகும். வர்த்தகராக இருந்து நன் மக்களைப் பெற்று நாட்டுக்காக தேசிய உணர்வை ஊட்டக்கூடிய தன் மைந்தனை நாட்டிற்கு உதவிய பெருமை இவருடையது. நன் மனைவியை அடைந்து நல் இல்லறம் நடாத்தி வந்தவர். வர்த்தகர் உலகில் நீதியுடன் நடந்த பெருந்தகை. அவர் ஊர் மக்களால் நன்கு மதிக்கப்பட்டவர். அவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் அவர் குடும்பமும் ஆறுதல் அடைய வேண்டும் என்பதையும் மிகவும் ஆதங்கத்துடன் கூற விரும்புகிறேன்.

**க.சிவராசா, தலைவர்**
**இந்துவாலிபர் சங்கம்,**
**திருநெல்வேலி.**

## வளர்ச்சியடைய

- *என்று முதன் முதலாக நீ உன்னையே கேலி செய்துகொண்டு சிந்திக்கத் தொடங்குகிறாயோ அன்றுதான் நீ வளர்ச்சி அடைய ஆரம்பிக்கிறாய்.*
- *பகுத்தறிவே உயர்வுக்குக் காரணம்*
- *அறிவு ஆட்சி செய்யும் இடத்தில் ஆற்றல் ஆட்சி செய்யாது, மாறாக துணையேசெய்யும். - ஜான் மில்டன்*
- *அறிவு சோம்பலுக்கு விரோதி, நித்திரைக்குச் சத்துருவாகும். -சுவாமிநாத சர்மா*
- *அறிவு வளர வளர உணர்ச்சிகள் பண்படுகின்றன. நுட்பமடைகின்றன. ஆற்றலும் வேகத்துடன் இருக்கும்.*
- *அறிவு குறைந்த நிலையில்தான் உணர்ச்சிகளும், ஆற்றலும் வேகம் உடையதாய் விளங்குகின்றன. - மு.வரதராசனா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணையும் மக்களையும் நேசித்தார்

செந்தமிழ்ப் பண்பும் சிவநெறி வாழ்வும் அந்தமில்லாத இன்ப அழகும் கொண்ட ஈழத்திரு நாட்டிலே மணிமுடியாகத் திகழ்வது யாழ்ப்பாணம். இதற்குத் தென்பகுதியில் சப்ததீவுகளில் ஒன்றாக மிளிரும் புங்குடுதீவு என்னும் புகழ் பூத்த பொன்னகரில் மடத்துவெளி என்னும் வயல் சூழ்ந்த பதியில் வாழ்ந்தவர் அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்கள். இவர் தனது பாடசாலை வாழ்வை முடித்துக்கொண்டு திருகோணமலை சென்று தொழில் கற்றதன் மூலம் பிரபல வர்த்தகராக மாறினார். அக்காலத்தில் திருகோணமலையில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றத் திட்டங்களை எதிர்க்க வேண்டும் என்ற இளமைத் துடிப்பினால் அன்று திருகோணமலை தமிழரசுக்கட்சித் தொண்டர் களுடன் சேர்ந்து போராட்டம் நடாத்தி இனப்பற்றுடன் வாழ்ந்தவர். அத்துடன் புங்குடுதீவில் அவரது வீட்டிற்கு அண்மையில் உள்ள வயலூர் முருகனையும் நுழைவாயில் பிள்ளையாரையும் பாணாவிடை சிவனையும் வழிபாடு செய்து அவ்வாலயங்களின் திருப்பணிக்கும், பங்களிப்பு நல்கியவர். இவரது இல்லற வாழ்வில் இவரது மனைவியும் உறுதுணையாக இருந்தது மட்டுமல்லாது நன்மக்கட் பேறுகளையும் பெற்று அவர்களிற்கு சிறந்த முறையில் வழிகாட்டி "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக் கிணங்க அவர்களை வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வாழவைத்தார். அத்துடன் தானும், மனைவியும் பிள்ளைகளிற்குச் செய்யும் கடமைகளில் ஒன்றென உணர்ந்து அனைத்துப் பிள்ளைகளிற்கும் மணம் முடித்து வைத்தார்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்ற பொய்யா மொழியின் கூற்றுக்கிணங்க அவருடைய எச்சங்களான பிள்ளைகளும் சிறப்புடன் வாழ்வதை அவதானிக்க முடிகிறது. இந்த வகையில் அவரது மூத்த புதல்வன் கனகலிங்கம் அவர்கள் இந்த நாட்டையும், மண்ணையும் நேசிப்பதுடன் சிறந்த பேச்சாளராகவும், சமூகத்தொண்டனாகவும் கூட்டுறவாளனாகவும் திகழ்கின்றார். இதன் மூலம் பல சமய, சமூக, கூட்டுறவு நிறுவனங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம் போன்ற பதவிகளையும் வகிக்கின்றார்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ்சொல்"

என்னும் குறளிற்கு ஏற்ப வாழ்ந்துவருவதும் குறிப்பிடத் தக்கது. இவ்வாறே ஏனைய பிள்ளைகளும் வெளிநாடுகளிலும் எமது கிராமத்திலும் வாழ்ந்து வருகின்றனர்.

அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்கள் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பதற்கேற்ப இம்மண்ணில் நெறிபட வாழ்ந்தமையால் வானுலகில் வாழும் தேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவார் எனக் கூறுவதுடன் அவரை இழந்து தவிக்கும் மனைவி பிள்ளைகள், உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**எஸ்.கே.சண்முகலிங்கம்,**
**அகில இலங்கை சமாதான நீதிவான்,**
**அதிபர் யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயம்.**

## எதிர்காலம் உருவாக

- *செயலை விதையுங்கள், பழக்கம் உருவாகும்.*
- *பழக்கத்தை விதையுங்கள், குணம் உண்டாகும்.*
- *குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர்காலம் உருவாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மார்த அஞ்சலி

புங்குடுதீவு மடத்துவெளி அமரர் உயர்திரு. சொக்கர் என்ற பரராசசிங்கம் அவர்களின் மறைவினையொட்டி அவ்வூர் நுழைவாயில் வீரகத்தி விநாயகர் ஆலய முன்னாள் பிரதமகுரு நா.சின்னத்துரை குருக்களின் மூத்தமகன் அவர்களால் வழங்கப்பட்ட அனுதாப மடல் திரு.சொக்கர் அவர்களை சுமார் 45 ஆண்டுகள் பழகியவன் என்ற வகையில் எனது சிறுபராயத்தில் தற்போது பாலசுப்பிரமணியர் தேவஸ்தானமாக விளங்கும் வரதீவு நாச்சிமார் ஆலயத்தில் பூசைக்கு செல்லும் போதெல்லாம் தினமும் சந்திக்க வாய்ப்புக்கிட்டியது. மாறாத தெய்வ பக்தி, நேர்மை, பரபோகார சிந்தனையுடன் வாழ்ந்து வந்தார். ஊரில் சொக்கர் என்றால் எந்த சிறுபிள்ளைக்கும்கூட தெரிந்தவர் அவர். தம் தவப்பயனாக நல்ல குடுத்தலைவனாகவும், மக்களிடத்து நன் மதிப்பு பெற்றவராகவும் சிறந்த சிந்தனையாளருமான கனகலிங்கம் அவர் சகோதரர்களை பிள்ளைகளாக பெற்று வாழ்ந்தார். எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் திருப்பாதம் அடைந்த அவர் ஆத்மா சாந்திபெற பிரார்த்தித்து அவர் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி பிள்ளைகளுக்கும் தேறுதல் கூறி விடைபெறுகின்றோம்.

**சிவஸ்ரீ க.குகதாஸக்குருக்கள்,**
**ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்,**
**கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சொக்கப்பா" என்றால் பல நாடுகளிலும் உள்ள எம் பிரதேசத்தின் இளம் மட்டங்கள் தொடக்கம் பலரும் அறிவர்.

அன்பினாலும் பண்பினாலும் உயர்ந்து நின்ற நாகமுத்து பரராஜசிங்கம் (சொக்கப்பா) என்பவர் எமது பிரதேசத்தின் சமயப் பணி சமூகப்பணி ஊடாக பிரதேச வளர்ச்சிக்காக தன்னையே உருக்கி ஒளியூட்டியவர்.

இதே போன்று தனது குடும்ப வளர்ச்சிக்காக அயராது உழைத்து பலராலும் போற்றத்தக்க வகையிலும் உலகறியும் வகையிலும் பிள்ளைகளை உருவாக்கிய உத்தமர்.

எம் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து பல பிரதேசத்திலும், பல நாடுகளிலும் வாழ்கின்ற எம் இளமட்டங்கள் தொடக்கம் பலரும் "சொக்கப்பா" என்ற நாமத்தை தமது இறுதிக் காலம் வரை மறவார்.

மறைந்த எமது சொக்கப்பாவின் இனிய நினைவுகளை மனதில் சுமந்து கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய எம் வயலூர் சுப்பிரமணிய சுவாமியை வேண்டிக் கொள்வோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இப்படிக்கு
துரைராசா சுவேந்திரராஜா B.Com
விஷேட புலன் விசாரணை அதிகாரி
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்காத மனிதன்
# அமரர் நாகமுத்து பரராசசிங்கம்

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்களின் நினைவு மலருக்கு நிறைவுரை வழங்குவதில் மனநிறைவு கொள்கிறேன்.

இந்தப் பெருமகன் சாதாரண மனிதனாக நோக்கிலும் போக்கிலும் தோற்றம் பெற்றாலும் பெரும் பிள்ளைகளைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தவர். தமிழர் தாயகத்தின் தலைப்பட்டினமான திருகோண மலையில் மூவினமக்களோடு வாழ்ந்து தனது வியாபார நடவடிக்கை களை மேற்கொண்டபோதும் தனது தனித்துவத்தையும் இனத்தின் பெருமையையும் விட்டுக் கொடுத்து வாழ்ந்ததில்லை. அந்த வாழ்க்கை முறையையே தனது பிள்ளைகளுக்கு ஊட்டியுள்ளார். வளர்த்துள்ளார்.

அந்த வழிவந்தவர்களில் அவரது மூத்த புதல்வன் திரு. ப. கனகலிங்கம் அவர்கள் சமயத்திற்கும், சமூகத்திற்கும், தேசியத்திற்கும் ஆற்றும்பணி வளர்ப்பின் பயனை கோடிட்டுக்காட்டுகிறது.

மனிதன் மண்ணில் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பது தான் அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்களின் வாழ்வின் பெருமைக்குரிய காலமாக அமைந்துவிட்டது. அந்த பெருமைக்குரிய மனிதனின் ஆன்மாவின் சாந்திக்காகவும், அவரது பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர், நண்பர்களின் துயரில் நாமும் கலந்துகொண்டு இறை சாந்தியை வேண்டி நிற்கின்றோம்.

**சொலமன் .சூ சிறில்**<br>
**தலைவர்**<br>
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**<br>
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தின் உறைவிடம்

மானிடராய்ப் பிறந்தோர் வாழ்க்கையில் சகல செல்வங் களையும் பெற்று வாழ்வாங்கு வாழும் போதுதான் அவருடைய வாழ்வு முழுமை பெறுகின்றது. அத்தகைய முழுமையான வாழ்க்கை சித்திக்கப்பெற்றவர் தான் அமரர் பரராஜசிங்கம் ஐயா அவர்கள்.

மற்றவர்களை மதிக்கும் மனித நேயமும் குலத்துக்கேற்ற உயர்பண்புகளையும் கொண்டு விளங்கிய அந்தப் பெருமகன் இன்று நம்மிடையே இல்லை என்று நினைக்கும் போது மனம் ஒரு கணம் நம்ப மறுக்கின்றது. அவர் வாழும் காலத்திலேயே நன்மக்களைப் பெற்று அம்மக்களை சமூகத்தில் வாழ அவர்களுக்கு வழிகாட்டிக் கொடுத்துள்ள முறை எம் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றது.

அன்னார் திருகோணமலையில் வர்த்தகராக இருந்த காலத்திலும் சரி, அவர் பிறந்த மடத்துவெளி கிராமத்தில் வாழ்ந்த காலத்திலும் சரி சமயப்பணிகளிலும் சமூக நலப்பணிகளிலும் அவரது செயற்பாடுகள் அவரால் முன்னெடுத்துச் சென்ற முறையும் அதில் மனித நேயத்தை அவர் கடைப்பிடித்த பாங்கும் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக என்றும் வாழும்.

இப் பெருமகனார் எனது உறவினராக இருந்த போதிலும், இவரது தலைமகனாக விளங்கும் தம்பி கனகலிங்கம் அவர்களின் இனிய தொடர்பினால் அவரின் குடும்பத்தவர்கள் அனைவரோடும் பழகும் வாய்ப்புப் பெற்றேன். அமரர் அவர்கள் நல்ல குடும்பத் தலைவராக விளங்கி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மகிழ்வில் வாழ்ந்து அமரத்துவம் பெற்றுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து அவரது குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பொ. வைரமுத்து,**
**செயலாளர், நல்லூர் பிரதேச சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு மண்ணில் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார்

புங்குடுதீவு மண்ணில் பிறந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் அமைந்துவிட்ட அமரர் நாகமுத்து பரராசசிங்கம் பற்றி தமிழர் தாயகமெங்கும் அறிந்தவர்கள் அனேகர். திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் தமிழ்க்குடி வந்த இவர் தமது பிறந்த மண்ணை விட்டுத் திருகோணமலை சென்று வர்த்தகத் துறையில் ஈடுபட்டு ஒப்பாரும் மிக்காரும் இன்றி சுமார் 30 ஆண்டு காலத்திற்கு மேலாகப் பேரும் புகழும் பெற்று விளங்கினார். ஆரம்ப கால தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக விளங்கியதுடன் தமிழ் மக்களது சமூக அரசியல் முன்னேற்றங்களுக்காக நடாத்தப்பட்ட போராட்டங்களிலும் ஈடுபட்டு தமிழினத்தின் விடியலுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் இப்பெருந்தகை.

தனது வயோதிப காலத்தில் கூட தான்பிறந்த மண்ணில் கால் பதிக்க முடியவில்லையே எனும் மாறாத் துயருடனே மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்ட அமரர் அவர்களைப் போல் இன்னும் எத்தனை எத்தனையோ தமிழர் நெஞ்சங்கள் வெதும்பித் தவிக்க வேண்டாம் என்பதும் அவரது வேணவாவாகும்.

தமிழினத்திற்காகத் தனது உழைப்பையும், சக்தியையும் தந்து தனது அதி உச்சப் பங்களிப்பை வழங்கியிருக்கும் இவரது மறைவு இவரது குடும்பத்தினருக்கும் தமிழ் சமூகத்திற்கும், ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

எனினும் அவர்தம் வாரிசுகள் தொடர்ந்து தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவைகள் ஆறுதல் தருவதாக உள்ளமை கருத்தில் கொள்ள வேண்டியதே. காலத்தின் கொடுமை இவரது ஏனைய மைந்தர்களை புலம் பெயர வைப்பினும் அருமை மைந்தன் திரு.கனகலிங்கம் அவர்கள் தனது தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதற்கொப்ப தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களது விடியலுக்காகவும், சுபீட்சமான சுதந்திரத்திற்காகவும் தன்னையே அர்ப்பணித்து சேவையாற்றி வருவது தந்தை வழி மைந்தன் என்பதை நிதர்சனப் படுத்துவதாக உள்ளது.

தனது 78ஆவது வயதில் அமரத்துவம் அடைந்துவிட்ட நாகமுத்து பரராசசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**ம.சிவசுப்பிரமணியம்**
**தலைவர்**
**சங்கானை ப.நோ.கூ.சங்கம்**
**உபதலைவர்**
**யா.வி.நு.கூ.ச., சமாசம்.**

## பிறர் மனத்தைப் புண்படுத்தாதே

- எப்போதும் பிறரை நிந்திப்பதிலும், தூற்றுவதிலும், இகழ்வதிலும், அவர்களிடம் குற்றம் காண்பதிலும் ஈடுபடுவது சரியல்ல.
- இது மனிதருக்கே பிடிக்காது எனில் கடவுளுக்கு எப்படிப் பிடிக்கும்?
- இப்படிப் பிறரை தூஷிப்பது நம்மையே பாதிக்கும் என்பதை மறவாதீர்கள்.
- இன்று நீங்கள் சிரித்துக்கொண்டே பிறரை நிந்தித்தும், இகழ்ந்தும் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அதுவே உங்கள் மீது வட்டியும் முதலுமாகத் திருப்பப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- ஆகவே நிந்திப்பதும், அவமதிப்பதும், அவச் சொல்லால் பிறர் மனத்தைப் புண்படுத்துவதும் கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டியவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## பெருவிருட்சம் சரிந்தது

வேர் கொண்டு விருட்சமாய்
விழுதெறிந்து எங்கள் மண்ணில்
யாரென்று முகமன் பாராது
கண்ட இடமெல்லாம் சேவையே
கனதியாக ஆற்றி நாளும்
இன்பம் துன்பம் இரண்டிலும்
இணையாகக் கலந்து
ஊரின் நன்மைக்காகவே
உழைத்த உத்தமரே
உமை எப்படிக் கவர்ந்தான் காலன்
நீர்கொள் கண்களுடன்
நெடிது ஆற்றாது துடிக்கின்றோம்
வாழ்க உமது பொன்னுடல்
வையத்துள் புகழுடனே.....

**ஓம்சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

**ஆறாத்துயரில் பங்கு கொள்ளும்**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.**
**புங்குடுதீவு - நயினாதீவு பல.நோ.கூ.சங்கம்.**

யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசத்தின் தலைவர்
திரு.ப.கனகலிங்கம் அவர்களது பாசமிகு தந்தையார்
**நாகமுத்து பரராஜசிங்கம்** அவர்களது
பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்

*யாழ்.மாவட்ட கிளிநோஸ்*
*விற்பனைப் பிரதிநிதிகளும், பணியாளர்களும்.*
*இல.11, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதய அஞ்சலிகள்
அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ் மாவட்ட வி.உ.நு.கூ.ச.சமாசம்,
இல.111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.**

**உபதலைவர்,
பணிப்பாளர்கள்,
பொதுச்சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.**

புங்குடுதீவின் மைந்தனும் பிரபல சமூக சேவகரும் எமது சமாசத் தலைவருமான திரு.ப.கனகலிங்கம் அவர்களின் அன்புத்தந்தையார்

# திரு.நாகமுத்து பரராஜசிங்கம்

அவர்கள் காலமாகிய செய்தி அறிந்து
பெருந்துயர் அடைந்துள்ளோம்.

அன்னார் தான் மட்டும் வாழாது பிறரும் வாழ வேண்டும் என்னும் சமூக நோக்குடன் வாழ்ந்து மட்டுமல்லாது தம் மக்களின் வாழ்வையும் அவ்வாறே நெறிப்படுத்தி வாழவும் வைத்துள்ளார் என்பதைத் தமது மக்களின் தேவார பாராயணத்துடன் அன்னாரது பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானது சான்றுப்படுத்துகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை
வேண்டிநிற்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்,
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்ட விவசாய உற்பத்தி
நுகர்ச்சி விற்பனவு கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசத் தலைவரும், புங்குடுதீவு
ப.நோ.கூ.சங்கத்தின் தலைவரும்,
யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின்
ஒன்றியத்தின் பொதுச் செயலாளரும்,
யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின்
ஊடகப் பேச்சாளருமான திரு.ப.கனகலிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தையும்
ஆவார் இவர் காலமாகி விட்ட துயரச் செய்தி
அறிந்து மிகுந்த வேதனையடைகிறோம்
அவர்களது குடும்பத்தின் துயரில் கலந்து கொண்டு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**தேசிய எழுச்சிப் பேரவை,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

புங்கை நகர் ஈன்றெடுத்த
புனித மகன் ராஜசிங்கா
தங்க நகர் திருமலையில்
தனி நிகராம் வாணிபத்தில்
உந்தனிளம் குருத்துக்கள்
உயர்வதற்காய் பணம் சேர்த்து
பெற்றெடுத்த உத்தமர்க்குள்
பெருமகனாம் கனகலிங்கம்
மனிதருள்ளே மாணிக்கமாய்
மலர்வதனால் மகிழ்வுற்றாய்
பெறுகின்ற பேறுகளில் பேரக்குழந்தைகளின்
மழலை மொழி கேட்டு மகிழ்வுற்று வாழ்ந்திருந்தாய்
அத்தனையும் வையத்துள் பெற்றுவிட்ட
பெருமிதத்தால் பூவுலகை நீர்த்தாயோ!
உன் பாதத்தில் சூட்டுகிறோம் கண்ணீரால். அஞ்சலிகள்

**தலைவர், பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள், அங்கத்தவர்கள்.**
**வேலணை, ப.நோ.கூ.சங்கம்,**
**வேலணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

புங்குடுதீவு திரு.நாகமுத்து பரராஜசிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த கவலை அடைந்தோம்.

வர்த்தகத்துறையில் உயர்ந்த நிலையில் இருந்து சிறந்த சமூகசேவை ஆற்றிய அமரர் பரராஜசிங்கம் அவர்கள் எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றார். அவருடைய கண்ணியம் மிக்க வர்த்தக சேவை, சமூக சமயப்பணிகள்தான் அதற்குக் காரணம் எனலாம்.

இவருடைய பணிகள் தமிழ் நிலத்தின் விடிவுக்கு சேர்ப்பனவாக அமைந்த காரணத்தால் அவருடைய குடும்பத்தினர் குறிப்பாக அவருடைய பிள்ளைகளை தமிழ் மண்ணின் விடுதலைக்கு உழைக்கின்ற உத்தமர்களாக்கி வைத்தார். இத்தகைய பணியைச் செய்வதன் மூலம் தமிழ் மண்ணின் விடுதலைக்கு சிறந்த பங்களிப்பு செய்துள்ளார் என்று சோன்னாள் மிகையாகாது.

அன்னாரின் மூத்த மைந்தன் திரு.ப.கனகலிங்கம் அவர்கள் கூட்டுறவு அரசியல் சமூக,சமய துறைகளில் அரிய பணியாற்ற வைத்தவர் அவருடைய தந்தையார் ஆவார்.

இத்தகைய பண்புகள் உள்ள அமரர் பரராஜசிங்கம் அவர்களின் மறைவு இந்த தருணத்தில் ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் மறைவினால் துன்பப்படுகின்ற குடும்பத்தினர். சுற்றத்தார், ஊரவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.
அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சி.சிவமகாராசா**
**தலைவர்,**
**தெல்லிப்பளை, ப.நோ.கூ.சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த உத்தமருக்கு உள்ளம் நிறைந்த அஞ்சலி

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதில
தோன்றலிற் தோன்றாமை நன்று"

மனிதனாகப் பிறக்க விரும்பினால் புகழுடன் தோன்றுவது நல்லது. இல்லையேல் மனிதப் பிறவியாகத் தோன்றாமல் இருத்தலே நலம்.

தனக்காக வாழாமல் பிறருக்காய் வாழ்பவனுக்கு அழிவே இல்லை. அவனது அழிவு ஓர் உயிர்ப்பே. இந்த உலகத்தில் மனிதனாகப் பிறக்கின்ற ஒவ்வொருவனும் இறந்தே ஆகவேண்டும். இது இயற்கையின் நியதி. இதற்கு எவரும் விதிவிலக்கல்ல. ஆனால் இயற்கையின் நியதிக்குட்பட்டு இறந்தாலும் கூட ஒருசிலர் இறந்து இறவாது மக்களின் வாழ்வில் வாழ்ந்து விடுகின்றார்கள். இவர்கள் யார் எனில் தமக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்த நல்ல உள்ளம் கொண்ட பெரிய மனிதர்கள். இந்தவகையில் அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்களும் மக்கள் மனதில் இன்றும் புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றால் இம்மக்களுக்காக அளப்பரிய பணிகளைப் புரிந்துள்ளார் என்பது வெள்ளிடைமலை தன்னுடைய வர்த்தகத்தொழிலுடன் நின்றுவிடாது இச்சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்த பெரியவர்.

இத்தகையதொரு நண்பன் புகழ் கொண்டதொரு சேவையாளன் நன்றியுணர்வோடு நினைவு கூறப்பட வேண்டியவர். இது சமூகத்தின் கடனுமாகும்.

தந்தை மகற்காற்றும் உதவி
அவையத்து முந்தியிருப்பச் செயல்

நாட்டுப்பற்றுள்ளவர்களாக நன்மக்களைப் பெற்று வான்புகழ் கொண்டார் இவருடைய மூத்த மைந்தர் கனகலிங்கம் அண்ணர் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியத்தில் மிகவும் பற்றுறுதியுள்ளவராகவும் சிறந்த கூட்டுறவாள ராகவும் சமூக சேவையாளராகவும் யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளராகவும் இன்று எம் இனத்திற்காக அரும்பணியாற்றி வருகின்றார் என்றால் இவருடைய தந்தையாரின் வளர்ப்பும் வழிகாட்டலும் தான் முக்கிய காரணமாகும்.

"தக்கார் தகவிலர் என்பர்
அவரவர் எச்சத்தால் காணப்படும்"

என்பது பொருத்தமாகும். அன்புக்குரியவரின் சாவின் மூலம் மனம் கலங்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் ஆறுதல்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.

சு. கணேசலிங்கம்
செயலாளர்
தேசிய எழுச்சிப் பேரவை
நெடுந்தீவுப் பிரதேசம்
முன்னாள் தலைவர் நெடுந்தீவு
ப.நோ. கூ. சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல் மிக்க செயல் வீரரை நாடு இழந்திருக்கிறது

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்களின் வாழ்வு இந்த மண்ணில் நிறைவு பெற்று இருக்கின்றது. முக்கால் நூற்றாண்டு கண்டு மூன்று அகவையை நிறைவு செய்து தனது பணியை முடித்துக்கொண்டார். இவரது மறைவு குறித்து யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றது.

தனது வாழ்நாளின் பெரும்பகுதி தமிழரின் தலைநகராம் திருமலையில் கழிந்திருக்கின்றது. தனது சகோதரர்களுடன் இணைந்து கூட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு பெரு வாழ்வு வாழ்ந்தார். உப்புவெளியில் வர்த்தகம் செய்த காலத்தில் அரசியல் சமூக மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். இன்று கூட உப்பு வெளியில் இவரது பெயர் நிலைத்து நிற்கின்றது.

இருபதாம் நூற்றாண்டு நடுப்பகுதிகளில் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஆட்சியாளர்கள். துரிதமாக மேற்கொண்டனர். திருகோணமலையிலும் முனைப்புடன் குடியேற முற்பட்டபோது அதனை எதிர்த்து முனைப்புடன் திரு.பரராசசிங்கம் ஐயா போராடியதை இன்று திருமலை மக்கள் நினைவு கூறுகின்றனர்.

திருகோணமலையில் பல அபிவிருத்தித் திட்டங்கள் கிண்ணியா, வெந்நீர் கிணறு திட்டமும் இவர்களால் மேற்கொள்ளப் பட்டது. இக்காலத்தில்த் தான் அமரர் பரராசசிங்கம் அவர்களின் மூத்த தமையனார் கைலாயநாதன் உப்புவெளி கிராமசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அமரர் உட்பட நான்கு சகோதரர்களுக்கும் அந்த நாட்களில் திருமலையில் தமிழரசுக் கட்சிக்காக உழைத்து திருமலையில் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவாக வழி செய்தார்கள். இது மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து பல தமிழர்கள் திருமலையில் குடியேற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இப்போதும் இவர்களது வழித்தோன்றல்கள் திருமலையில் சீரும் சிறப்போடும் வாழ்ந்து வருகின்றனர்.

நல்ல வாழ்வை வாழ்ந்து தனக்குப் பின்னால் நல்ல வாரிசை உருவாக்கி தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் பணி செய்யும் வாய்ப்பை வழிகாட்டலைத் தந்து மறைந்திருக்கின்றார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு வரைவிலக்கணம் தந்துள்ளார்.

இதுமட்டுமல்ல தான் வாழ்ந்த வீட்டுக்குச் சென்று மடிய வேண்டுமென்பது அவரது கனவு அவரது வீட்டில் படையினர் நிலைகொண்டிருப்பதால் அவரால் அங்கு செல்ல முடியவில்லை. தனது காலத்தில் தமிழீழம் காண வேண்டுமென்ற கனவும் நனவாகவில்லை. அந்நினைவுகளோடு அவர் எம்மை விட்டுச்சென்றுள்ளார். அவரது மூத்த புதல்வன் ப.கனகலிங்கம் யாழ் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் செயலாளராக நீண்டகாலமாக இருந்து வருகின்றார். அவரது காலத்தில் தகப்பனார் கனவு நனவாகும். ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**லயன்.க.மு.பத்மநாதன்**
**பொருளாளர்**
**யாழ் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்**
**யாழ் மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசான்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அலைகடல் சூழ் நடுவினிலே அழகான கிராமமாய்த் திகழும் புங்குடுதீவின் நுழைவாயிலில் உள்ள மடத்துவெளியில் அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்கள் பிறந்தார். நான் அப்பகுதியின் கிராம உத்தியோகத்தராகக் கடமையற்றிய ஆரம்பத்தில் அவ்வூர் மக்களை எமக்கு அறிமுகப்படுத்தியதோடு, அம் மக்களின் வாழ்வி பற்றியும் எடுத்துக் கூறி ஓர் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். இவரது அன்பான ஆதரவான பேச்சு என்றும் மறக்க முடியாது நிற்கின்றது.

அத்துடன் தனது அயலில் உள்ள முருகன் பிள்ளையார், பாணவிடைச் சிவன் ஆலயங்களில் திருத் தொண்டு செய்து வழிபாடு செய்வதையும் என்னால்க் காணமுடிந்தது. இவர் இனப்பற்றுடனும் குடும்பப் பற்றுடனும் சிறப்பாக வாழ்ந்தமையால் அவரது பிள்ளைகள் சிறப்புடன் நாட்டுப்பற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவரது பணியைப் பின்பற்றி மகன் கனகலிங்கம் அவர்கள் நாடு போற்ற, கிராமம் போற்ற சேவையாற்றி வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமல்லாது "திரைகடல் ஓடி திரவியம் தேடு" என்ற குறிக்கோளுடன் தனது பிள்ளைகளை வெளிநாடுகளில் சென்று உழைப்பதற்கு ஆவன செய்துள்ளார். பிள்ளைகளின் நிறைவான வாழ்வைக் கண்டுசந் தோஷத்துடன் இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல எம்பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

கு.சந்திரா
கிராம அலுவலர்
புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்தார் வாழ வைத்தார்
# வரலாறு வாழ்வைக்கும்

முதல் மனிதன் தோன்றி - அங்கு
முத்தமிழ் வளர்த்த தெங்கள் குமரிநாடு
மூதறிஞர் வாழ்ந்து
மூப்பு வந்து கடற் கோள் கொண்டதுவோ? 1

கொடுங் கடற்கோள் கொண்டதனால்
குமரி என்ற லெமுரியா மூழ்கியதே
இந்து மா கடலின் மூர்க்கம் தணிந்த போது
குமரி நாட்டின் எச்சமாய் ஈழநாடு உதயமானதே 2

மாமன்னன் இராவணன் ஆண்ட நாடு - அவன்
மாசற்ற தமிழுக்கு வகை சூட்டினான்
சிவனுக்கு முடி சூட்டி விழா வெடுத்தான்.- சிவ
பக்தர்க்காய் சைவத்தை நிலை நாட்டினான். 3

இந்துமா கடலின் அழகாய்
ஈழத்தின் மணி முடியாய்
இளமையின் செழிப்பே உருவாய்
இலங்கிடும் சப்த தீவுகள் காண்பீர். 4

பொங்கிடும் நீலக் கடலினை சுமந்த
சுந்தரத் தீவுகள் ஏழிலினில் முத்தாய்
பொழுதும் நாளும் போற்றிடும் வண்ணம்
சுடர் வெட்டெரியும் புங்குடு தீவெனும் நன்னிலமே. 5

புங்குடுதீவு: அது ஒரு அற்புதமான மண்வாசனை
தமிழுணர்வுக்கு உரமூட்டியது. தேசிய
விழிப்புக்கு வழி கோலியது - தமிழ்ப்
போராட்ட வெற்றிக்கு தோள் தந்தது. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பேர்க்கு வாழ்வு தந்த வற்றாத பூமியது
நாடி வந்த நால்வருக்கும் நன்மதிப்பை தந்த நிலம்
அள்ள அள்ளக் குறையாத செல்வத்துக்கதிபதி
ஆலயமும் மணியொலியும் நீதி சொல்லும். 7

அற முடையோன் அருளுடையோன்
அல்லல் அகற்றும் பேறுடையான்
ஆள் புலமுடையோன். சான்றோருடையான்
அவை எல்லாமுடையது புங்குடுதீவு. 8

நெடிதுயர்ந்த பனை மரங்கள் நீண்ட
நெல் வயல் நிலங்கள் - அந்த
நெய்தல் நிலத்தருகே பாடு மீனினங்கள்
நெஞ்சை விட்டகலா அந்த நிலக் கோலங்கள், 9

அழகே உருவான அந்த புங்குடுதீவு
அங்கே ஈர்பத்து கிராமங்கள் - அதிலே
பேர் சொல்லும் ஊராக வல்லன் கிராமம் - அது
ஆலிடை வேம்பு நடுவே அடர்த்தியாய் பனங்காடு. 10

எங்கள் குடும்பம் அங்குதான் பிறப்பெடுத்து
ஆயிரம் பனைகள் சீதனம் பெற்ற
ஆருயிர் கறுப்பாத்தை உடையார் பரம்பரையில்
எங்கள் உறவும் மங்காப் புகழோடு. 11

செக்க செவேலென்று சிவந்த நெற்றியில்
திருநீற்றுப் பட்டையும் காதிலே கடுக்கனும்
நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும்
செவ் வதனம் மலர்ந்திட்ட சிரிப்பே நாகமுத்து. 12

நாகமுத்துவின் நற்றவப் பயனால்
நில மகள் பாங்கொடு நிலாவொளி போல
நித்தம் மகிழ்ந்திட பந்தம் தழைத்திட
நிலைத்திடும் துணைவியாய் சேர்ந்தாள் செல்ல முத்து. 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமுத்துவும், செல்லமுத்துவும்
நன்னிலம் போற்றவே வாழ்ந்து மகிழ்ந்தனர்
நாகதம்பிரானை நாள் தோறும் தொழுது
நல்ல வேள்வியின் பயனாய் மக்களைப் பெற்றனர். 14

இல்லற த்தத்துவம் பேணிக் காத்து
நற்றவம் பூண நாளும் கோளும்
நயந்து பணிந்து நன்மைகள் செய்திட
நல்ல நேரத்தில் உதயமானான் கைலாயநாதன். 15

இறைவனின் திருவருள் கிட்டியதால் இங்கு
இராமலிங்கம் என்ற மைந்தனும் வாய்த்தனன்
ஆண் பிறந்தாலும் ஆசைக்கு பெண் இல்லை என்றில்லா
அன்பே வடிவாக செல்லம்மா உதயமானாள். 16

கல்விக்கு தாயாம் கலைமகள் கடாட்சத்தால்
காவியப் புதல்வியாய் கண்மணி வந்தாள்
காற்று அசைந்து அந்த காரிருள் கிழியவே
காலைக் கதிரவன் பரிசானான் பரராசசிங்கம் 17

செல்ல முத்துவின் சீரிய தெய்வ பக்தி கண்டு
சிறப்புகள் பல பெற்று வாழ நினைந்து நித்திலம்
நினைவு மறவா கடைசி மகனாக உலகநாதன்
உதித்தனன் உலகம் உய்ய 18

நாகமுத்துவும் நல் செல்லமுத்துவும்
இயல்புடைய மூவர்க்கும் துணையாக நின்றார்
இரப்போர்க்கு இல்லையென்னாது வழங்கினார்
ஈரிரண்டு மகனும் ஓரிரண்டு மகளோடு வாழ்ந்தனர் 19

பிள்ளைகள் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து
பேறு பல பெற்றே பிறக்க வேண்டும் –அதுவும்
நற்பிள்ளைகளாகவும் வேண்டும் – கல்வி கேள்விகளில்
சிறந்து கலைகள் பல கற்றான் பரராசசிங்கம் 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர் மகிழ்ந்திட உற்றார் உவகை பெற
சிற்றூரில் பிறந்து தவழ்ந்தான் பாலகன் பரா
தாம் செய்த தவத்தால் தாய்தந்தை
மனங்குளிர்ந்து தாலாட்டி வளர்த்தனர் 21

கட்டிலிலும் தொட்டிலிலும் மார்மீதும்
தோள்மீதும் சுமந்து யாதுமே படாமல்
காத்து வளர்த்து அங்கு பல கதைகள்
சொல்லி நீதி நெறியுடையதாக வளர்த்தார் 22

பாரினில் பாலகன் அவதரித்தான் – அங்கு
பெற்றவள் பிள்ளைக்கு பெயர் சூட்ட
உற்றவர் பலர் கூடி உரைத்தனர் பல பேர்கள்
பெற்றவளுக்கு பிடிக்க பேர் இன்னும் வரவில்லை 23

பிள்ளைக்கு பேர் வைப்பதில் தான் என்ன
பேரானந்தம் அழகான குழந்தை தனக்கும்
அதுவோ தெரிவது போல் கையசைத்தது காலசைத்தது
அம்மான் மாமி பரராசசிங்கம் என பெயரிட்டனர். 24

ஊரும் உறவும் அதுவும் கிராமத்து உறவு
உழைத்து உழைத்து உரமேறிய உடற்கட்டும்
கூடி வாழ்ந்து குறைதீர்த்த சுகமும்
அவர் பிறந்த ஊருக்கேயுண்டு 25

பாலகன் பரராசசிங்கம் கொழு கொழுவென
படிப்பில் கெட்டிக்கார பையனாக
விளையாட்டிலும் சக வேலையிலும் வீரனாக
விவேகமாக நடந்து பலராலும் பாராட்டப் பெற்றான் 26

குழந்தையின் அழகும் துரு துரு முழியும்
பார்ப்போரை கவர்ந்திழுத்தது –சதைப்
பிடிப்புள்ள அந்த சொக்கை கிள்ளி
சொக்கர் என்ற பெயரையும் நிலைபெறச் செய்தனர் 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகன் பரா பள்ளிக்குச் சென்றான் - நன்றாக
கற்றான் கசடறக் கற்றான் - நாலுபேர்
மதிக்க நடந்தான் பல கலைகளை கற்று
பல வழியில் உயர்வு பெற்றான் 28

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு
தேட்டம் இல்லையேல் யாவர்க்கும் தாழ்வு
அனுபவப்பட்ட மூத்தோர் வாக்கை சிரமேற்கொண்டு
மூத்த தமையனார் காட்டிய வழியில் 29

திருகோணமலை எனும் தலைநகர் சேர்ந்தார்
சஞ்சலமின்றி சகோதரர் நால்வரும்
வாணிபத் தொழிலை வளமுடன் செய்தனர்
தேடிய செல்வத்தை சேவையில் செலவழித்தனர் 30

திருமலை வடக்கே உப்பு வெளியில்
உயர்ந்தது வர்த்தக இராச்சியம்
யஃவனா ஸ்டோர்ஸ் என்னும் பெயரில்
வாழவைத்தது பலபேர் வாழ்வை 31

வர்த்தகம் வளர வாய்ப்புக்கள் வந்தன
வாழும் மக்கள் துயர் துடைத்து வாழ்ந்தனர் அங்கு
மக்களின் சேவையை மனதினில் நிறுத்தி
மானிடம் வாழ வழிவகை செய்தனர் 32

அரசியல் தொண்டு யாவரும் போற்றிட
அக மகிழ்ந்தே நின்று சகோதரர் ஆற்றினர்
திருமலையில் தமிழன் வெல்லவேண்டுமென்று
தமிழரசுக் கட்சிக்கே தூணாக நின்றனர் 33

தமிழனின் அரசியல் பலம் - கட்டி எழுப்பவேண்டும்
தேசிய ரீதியாய் தமிழ்த்தேசியம் வளர
தமிழ் தேசம் ஒன்று வேண்டுமென்றார்
அந்த கூற்றுக்கு இறுதி வரை போராடினார் 34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை மண்ணில் தமிழ்த் தேசியம் உயர
தாம் சேர்த்த செல்வத்தையே செலவிட்டார்
அரசியல் தொண்டு அகிம்சைப் போர் என
அனைத்துக்கும் முன்னோடியாய் திகழ்ந்தார் 35

உப்புவெளி கிராம சபைத் தேர்தலில்-தன்
மூத்த தமையனார் தலைவராக வர
முன்னின்று உழைத்து வெற்றி கண்டு
யாழ்ப்பாணம் திருமலை ஒற்றுமை கண்டார் 36

ஐம்பது அறுபதுகளில் தமிழர் நிலங்களில் நிகழ்ந்த
சிங்களக் குடியேற்றம் தடுப்பதற்கே
தங்கள் சக்திக்குட்பட்டு தலைமை தாங்கினர்
தமிழ் மக்களைத் திரட்டி பல போராட்டம் நடத்தினர் 37

கைலாய நாதர், இராமலிங்கம்
பரராசசிங்கம், உலகநாதன்
என்ற சகோதர ஒற்றுமை கண்டு
திகைத்து நின்றனர் எதிரிகள் யாவரும் 38

திருகோணமலையின் சிறப்புக்காக
தமது வாழ்நாளை அர்ப்பணித்தார்
என்றும் திருமலை நினைவாகவே வாழ்ந்தார்
உழைத்து உழைத்து ஊருக்கே செலவழித்தார் 39

வாழ்வாங்கு வாழ்ந்த அந்த நாளில்
உப்பு வெளியும் - புங்குடுதீவும் இடை
வெளி குறுகியே ஆனது - உப்பு வெளியிலிருந்து
பனங்காட்டிற்கு கார்களும் வான்களும் வந்தே போயின 40

கூட்டுக் குடும்பமாய் கூடியும் பாடியும்
அப்புவும், ஆச்சியும், மாமனும் மாமியும்
அண்ணனும் தம்பியும் அக்காவும் தங்கையும்
அந்த மச்சாளும் ஆடிப் பாடி மகிழ்ந்திருந்தார் 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமும்விவேகமும் ஆகி
வேல் விழி மாவீரனாகி – மையல் கண்
வேந்தனாகி வாலிபம் முறுக்கேறி வேதையை
தேர்ந்தெடுக்க விரும்பினான் பரராசசிங்கம் 42

பெண் பார்க்கும் படலம் தொடர்கிறது
மாமிக்கு நல்ல மருமகன் தேவை
நல்ல குடும்பம் அதுவல்ல குடும்பம் – விரும்பி
பல பேர் பெண் கொடுக்க போட்டி 43

செழிப்பும் வனப்பும் வயல் வெளிகளும்
செல்வோரை கவர்ந்து – மீள வரவழைக்கும்
செந் நெல் விளை நிலங்கள் காணும் வெளியே
மடத்துவெளி எனும் வயலூர் முருகன் பதியாம் 44

(திரு) வயலூர் முருகனை வழிபட்டுதிக்கும்
தில்லையம்பலம் துணை செல்லமுத்துவும்
திருவருள் கூடி திளைத்து மகிழ்ந்து
சின்னப்பிள்ளையெனும் தேவமங்கையை ஈந்தனர் 45

மாப்பிள்ளை பொம்பிளை பார்த்து முடித்து
மாலையிட்டாள் மங்கை சின்னப்பிள்ளை
மருமகன் ஆகினார். பரராசசிங்கம்
மணமக்களை வாழ்த்தி ஆலத்தியெடுத்தனர் 46

இல்லற வாழ்வை இனிதாய்த் தொடங்கி
மங்கலம் பொங்க வாழ்வினை சுவைத்து
மா தொரு பாகனாய் மேதினில் நிறைந்து
இப் புவி தன்னில் மேன்மையாய் வாழ்ந்தார் 47

பிள்ளைப் பேறு வேண்டி – குல தெய்வப்
பெருமானை நினைந்துருகி
ஐம்புலன் தன்னை யடக்கி ஆண்டு – இவ்வுலகில்
அருளுடை மக்கள் பேற்றை அடைந்தனர். 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற மாண்பு கண்டு இறைவனும்
இரங்கி நின்று வல்லமை கிருபையோடு
வரிசையாய் மக்கள் வந்து - நல்ல
மானிடம் செழிக்க வாழ்ந்தார் 49

உள்ளத்தில் நல்லலெண்ணக் கருவாய் உதித்து
கடவுளின் கிருபையாலே கனகலிங்கம்
முதல் மகனாக வந்துதித்தன் - ஆசையும்
பாசமும் கொண்டு அள்ளியே வளர்த்தெடுத்தார் 50

மேதினிற் கிசைவாய் தோன்ற - மேல்மகள்
அருளால் வந்து பரிவுடன் பாலசரஸ்வதி
பலரும் போற்றும் வண்ணம் முதல் புத்திரியாகி
முழு வீட்டையும் மகிழ்வித்தே யானாள் 51

பக்திக்கு வித்திட்ட பரமனார் பாதம்
பணிந்து பல முறை தவமிருந்து நல்
பாக்கிய சாலியாக பால சுலோசனாவை
பந்த பாசமாக பற்றுடன் பெற்றெடுத்தார் 52

பாலசுப்பிரமணிய சாமி அளித்த வரம்
பாதியிலே நின்றது போல் -பாலகன்
பாலசுப்பிரமணியம் பிறந்து வளர்ந்து
பருவ வயதெய்கையிலே பரமன் பதம் சேர்ந்தான் 53

ஞானம் முகிழ்ந்து யோகி ஆனதுவோ - நல்
வானம் ஒளி தந்து வெளிச்சம் வந்தது போல்
யோகேஸ்வரன் என்ற நல்லாளன் பிறந்து
குலக் குடும்பம் தழைக்க வழி கோலினான் 54

பரமனருளால் வந்து தித்த பாலயமுனா - பரமன்
வழி மோட்சமதாய் தவளும் பருவத்திலே
காலன் வந்து கவ்விச் சென்றானே - அந்த
கடுந்துயரை தாங்காமல் கவலையுற்றார் 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சமூகம் நீதி சொல்லும் - மூத்த
கைலாய நாதர் முடி துறக்க ஏத்தவொரு
பாகனாக எங்கள் குடும்பத்தில் பிறப்பெடுத்து
நித்தம் எங்களை மகிழ்விக்க நிதிஸ்வரன் ஆனார் 56

அம்மனும் ஆட்சி தந்து அளப்பெரும் கருணையாலே
பெற்றிடும் பிள்ளையெல்லாம் - பிறவிக்கடல் நீந்துவர்
பேற்றை பெற்று அவ்வையும் சொன்ன தத்துவம்
அளவிடும் முன்னே சென்று அணைந்தது பாலராகினி 57

ஈசன் எம்பெருமான் எல்லோர்க்கும்
நம்பெருமான் போன திசையெல்லாம் நல்
புகழோடு உயர்ந்திருந்தோன் - பேரன்
நாகமுத்து மறுபிறப்பாய் நதிஸ்வரன் வந்தானோ? 58

எங்கள் செல்வி இறுதியாய் வந்த செல்வி
மங்காப் புகழோடு மகிழ்விக்கவந்த செல்வி
சிவனுமை திருக்கடாட்சத்தில் திக்கெட்டும்
ஒளி பரப்பி திருமகளாய் வந்த பானுரேகா 59

நல்ல திரு முறையாய் வந்து - நானிலம்
போற்றி வாழ வல்ல திரு ஆலவாய்
சிவன் தாழ் பணிந்து வளமுடன்
வாழ்ந்ததே வையகம் வாழ்ந்ததே! 60

குடும்பம் ஒரு கோவில் என்பார் - குல
விளக்காய் ஒளிரும் இன்பம் நாளும்
செல்லும் வறுமை யென்றும் - தீராத
போதெல்லாம் சிறப்புடன் எதிர் கொண்டார் 61

பெற்ற மகவை வளர்த்த முறை
பிள்ளைகள் மீது காட்டிய அன்பு
கல்வி கேள்விகளில் ஞான மூட்டியது - என
பற்று வைத்து ஈடேற்றியது பாங்கு 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையும் செல்வமும் வாழ்க்கை நியதி
வாழ்ந்து மடிந்தவர் ஆயிரம் கோடி
வாழ்வில் வறுமை வந்த போதும்
வல்லமை கண்டு வாழ்ந்து காட்டினார் 63

குடும்பம் வாழ்வு குறைகள் தீர்த்து
அரசியல் சமூகத் தொண்டு புரிந்து
திருமலை மண்ணில் சேவைகள் ஆற்றி
சிறப்புடன் வாழ்ந்த தியாக செம்மல் 64

நெருக்கடி நிறைந்த திருகோணமலையில்
மலையென நின்று புயலென கிழம்பி
தமிழர் வாழ்வினை சூழ்ந்த பகையினை விரட்டி
வரலாறு வொன்றை திருத்தியெழுதினார் 65

சமூக நீதிக்கும் மறுமலர்ச்சிக்கும் தளராது
நின்று குரல் எழுப்பினார் - தன்
இளம் வயது நடுவயதில்- தான்
சார்ந்து நின்ற கட்சிக்காய் கொடியேற்றினார் 66

மக்களை பெற்றதன் மாண்பு தெரிந்து
மனதில் மகிழ்ந்து பொங்கியெழுந்து
குறைகள் பல தீர்க்க தன் வாரிசு
வளர்ந்து நிமிர்ந்து நிற்பது கண்டு மன நிறைவு கொண்டார் 67

பிள்ளைகள் வளர்ந்து பெரியதுமாகி
பெற்றபிதா மாதாவுக்கு ஒரு கடனுமாகி
பிள்ளைகள் திருமணம் பேசி முடித்து
சிறப்புற நடந்து முழுவதும் ஆகினர் 68

தன் சகோதரி கண்மணி பெண்ணையாம்
நாகேஸ்வரியை கனலிங்கம் கடிமணம் பூண்டார்
புங்குடுதீவின் தெற்கே சூழும் பெருங்காடதனில்
பொன்னுச்சாமி தெய்வானைப்பிள்ளை இல்லறத்தார்க்கு 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறி யொழுக்கத்தோடுதித்த
நவரட்ண சிங்கத்தை பாலசரஸ்வதி
கருத்தொருமித்து திருமணம் செய்தார் - நல்ல
காவிய புதல்வியாய் வாழ்ந்தே காட்டினார் 70

வேலணை கிழக்கினில் வாழ்ந்து போற்றிய
கந்தசாமி இராசம்மா தம்பதிக்கு ஏக
புத்திரனாய் அவதரித்த தவேந்திரராசாவை
இனிதே மணம் முடித்தாள் பாலசுலோசனா 71

சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும்
வர்த்தகம் வாணிபச் செல்வர்கள் வாழும்
சரவணையூர்வாழ் சோமசுந்தரம் புஸ்பராணி
புத்திரி அல்லி யோகேஸ்வரனுடன் இணைந்தார் 72

சண்முகலிங்கம் நித்யலட்சுமி தம்பதி சமேதர்
நயினை நாக பூசணியம்மன் நல்லருளால்
நல்ல கல்வி கேள்வியை நாளும் பெற்று சிறிதேவி
நிதிஸ்வரன் என்னும் நல்லாளன் இணைந்தான் 73

சென்றவிடமெல்லாம் சிறப்புக்கள் பலபெறும்
புங்குடுதீவு மடத்து வெளியெனும் புண்ணிய
பூமியில் பிறந்து கனடாவில் வாழும் ரவீந்திரன்
யோகமலர் தம்பதியின் ரூபிகாவை நதிஸ்வரன் கரம் பிடித்தார் 74

வளமான வாழ்வுக்கு வலுச்சேர்த்த
வலிவடக்கின் தையிட்டி தந்த வண்ண
செல்வரட்ணம் பரமேஸ்வரி செல்வமகன்
ரமணன் தன்னை பானுரேகா பற்றுடன் மாலையிட்டார் 75

கனகலிங்கம் தன்னை கைப்பிடித்த நாகேஸ்வரிக்கு
கலைமகள் அருளால் வந்தாள் கலியுகா - பால
சரஸ்வதி நவரட்ணசிங்கம் இணைந்து துதிசெய்து
பாலகமல், பாலநிர்மல், பால விமல் கூட 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலவித்யா, பால விதுனா என்ற பண்புடன்
பல பிள்ளைகள் பெற்று நிலை பேறடைந்தனர்
பாலசுலோசனாவும் தவேந்திரராசாவும் பாங்கோடு மணந்து
தனுசியா, சிந்துஜா, கௌசிகன்என பெற்று மகிழ்ந்தார் 77

யோகேஸ்வரன் அல்லி என்ற திருமண வாழ்வில்
ஜமி, அனீரா, அஜன் என செல்வங்கள் வந்தது
நிதிஸ்வரன் சிறிதேவி இல்லற வாழ்வில் இனிது மகிழ்ந்து
வல்ல அம்மன் துணையோடு நிதீசன், நிதீசா வந்துதித்தனர் 78

நற்றவம் செய்த வாழ்வினை பூண்ட
நதிஸ்வரன் ரூபிகா நல்மண வாழ்வில்
ருனிசன் பரூசன் என்ற நல்மகனை
நல்லருள் வந்தொரு வாழ்த்திடுதே 79

இளையவள் பைங்கிளி எங்களின் செல்லம்
இனியவள் பானுரேகா தன் கணவனாய்
இணைந்த ரமணன் தானும் இனிதுறவாகி
இறையருள் கூடி அடைந்தார் மகள் அபினுஷா 80

ஆலும் வேலும் அரசும் போல
ஆனவர் குடும்பம் விருட்சமாய் தழைத்து
நிழல் தரும் மரமாய் நிமிர்ந்து நின்ற
கோலத்தை கண்டு குளிர்ந்தனர் மக்கள் 81

மைத்துனர் மைத்துனி மாறாத அன்பு கொண்டு
வழிநெடு வாழ்நாள் முழுவதும் மனதில் பதிந்திருந்து
கைலாய நாதநாரின் நாயகியாம் - சிவகாமிப்பிள்ளை
இராமலிங்கம் மனையாள் பொன்னம்மா எனும் மைத்துனி யாவர் 82

செல்லம்மா வெனும் சிந்தையாளுக்கு கந்தையாகவும்
கண்மணி யானவள் காத்திருந்தாள் சபாரத்தினம் மைத்துரானார்
உலகநாதன் உமையாள் பாகமாய் புஸ்பவதி வாழ்ந்தார்
தன்வழி மைத்துனர் மைத்துனியாகினார் 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாள் கூடப் பிறந்த நல்லாளர்
மைத்துனராகவும் மைத்துனியாகவும் வாய்த்தனர் நன்றே
இளையவயதில் யமன் கவர்ந்த செல்லத்துரையாம்
இணைந்தவர் சேர்ந்தே பூங்காவனமாம் 84

வாழ்விலும் தாழ்விலும் வாசல் வரை வந்த
கனகம்மா வெனும் கார் குழலாள் மைத்துனி - அவர்
கணவனாய் வாய்த்தவர் கார்த்திகேசு எனும்
நல்லறிவாளன் நயமுடன் வாழ்ந்தான் 85

நாளும் பொழுதும் நன்னிலம் வாழ்ந்திட
நமது குடும்பம் நாளும் செழிக்க
நமசிவாயம் என்ற மைத்துனர் வாழ்ந்தார் - அவர்
நல் வாழ்வுக்காய் புனிதவதியை மணந்தார் 86

இறைவன் வழியில் இல்லறம் காணும்
இராசம்மா வெனும் இளைய மைத்துனி
சந்திரயோகம் சஷ்டி திதியில் சண்முகம் - தன்னை
இல் வாழ்வுக்கு ஏற்றதாய் இணைந்தார் 87

நல்ல தாய் தந்தையார் வாய்க்க பெற்றார்
நல்ல மனைவியைப் பெற்றார்
நல்ல மக்களைப் பெற்றார்
நல்ல உற்றாரைப் பெற்றார் 88

நல்ல மாமனும் மாமியும் வாய்க்கப் பெற்றார்
நல்ல மருமக்களைப் பெற்றார்
நல்ல மைத்துனரும் மைத்துனியும் பெற்றார்
நல்ல பேரப்பிள்ளை கண்டார் 89

நல்ல ஊராரும் உறவும் கண்டார்
நல்ல சுற்றத்தாரும் சூழலும் கண்டார்
நல்ல தொழில் நடத்தும் கால் ஆன்றோரைக் கண்டார்
நல்ல திருக்கோணேஸ்வரனை நித்தமும் கண்டார் 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நெடுவாழ்வில் தூய
நெஞ்சில் நினைத்ததெல்லாம் ஏராளம்
நிறைவு பல பெற்றாலும் இன்னும்
நிறைவேறாமை பலவுண்டு 91

இள வயதில் தமிழ் மூச்சு வீச்சாகி
நின்றது அது தன் மூச்சு நிற்கும் வரை நீடித்தது
தமிழரது தேசியம் தலை நிமிர எண்ணி
தாள் சேர்த்த செல்வமெல்லாம் செலவிட்டார் 92

தலை நகரில் தம் சகோதரர் நால்வரும்
தமிழன் புகழ் ஓங்கவென்று
தமிழரசுக் கட்சி வெல்ல கடும் உழைப்பை
தந்து தமிழர் நெஞ்சில் இடம் பிடித்தார் 93

முக்கால் நூற்றாண்டுக்கு மேல் வாழ்ந்தவர்
முதுமை வந்த போதிலும் கொள்கையிலுறுதி
மூதாதையர் கூற்றில் நம்பிக்கை கொண்டவர்
மூப்பு வந்தபோது துணிந்து எதிர் கொண்டார் 94

சாவைப் பற்றி முன்னமே அறிந்திருந்தார் - தன்
சாவைப் பற்றி கவலை கொள்ளவில்லை
பிறவியின் மகிமையை உய்துணர்ந்து
பிறந்த பேற்றினை அடைந்தார் 95

தன் இறுதி நாட்களை உணர்ந்தார்
எப்போதும் மதியம் குளிப்பார் அந்த
நாட்களில் காலையில் குளிப்பார் - தன்
புடவை தானே சுத்தம் செய்வார் 96

தமிழனுக்கென்று தனிநாடு வேண்டும் - அதுவும்
பிரபாகரன் காலத்தில் வேண்டும் என்றார்
தன் பிள்ளைகள் அரசியல் சமூகத் தொண்டு புரிவது
அவர் மனதுக்கு பெரு மகிழ்வைக் கொடுத்தது 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வாழும் காலத்தில் தன்னுடன் பெற்ற
பிள்ளைகள் இல்லை இது போரின்
கொடுமை: ஆனால் சாகும் நேரத்தில்
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் அருகில் இருந்தனர் 98

நல்ல சாவு அவருக்கு வந்தது
நாலு நாள் கூட படுத்திருக்கவில்லை
நல்ல வாழ்வு வாழ்ந்து முடித்து
நாச்சிமார் பதியை நலமுடன் அடைந்தார் 99

பிறப்பு உண்டேல் அங்கு மூப்பும் உண்டு
மூப்பு உண்டெனில் சாவும் உண்டு
சாவு உண்டெனில் மறுபிறப்பும் உண்டு
மறுபிறப்புண்டெனில் நம்பிள்ளையாகப் பிறப்பார் 100

## தேற்றம்

**பட்டமரம் தளிர் விட்டு தழைப்பதுண்டோ**
**பகவானும் திசை மாறி உதிப்பதுண்டோ**
**விட்டகன்ற உயிர்தான் வருவதுண்டோ**
**மேதினியில் நாம் விட்டுண்டிரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் உள்ளக் குமுறல்

உலகம் விசாலமானது. அங்கு வாழ்வதும் பெரியதுதான்
கரடு முரடான பாதை கடக்க இயலாதது
கற்களும் முட்களும் ஏராளம் - அதனைத் தான்
கற்ற புத்திக் கூர்மையால் வென்றே நின்றார்

எங்கள் அப்பனும் அம்மையும் அதனைச் செய்தனர்
நிலவு காட்டி சோறூட்டிய போதும் - நெடுந்
தோள் அளவு நிமிர்ந்த போதும்
பிள்ளைகள் சொல்லுக்கு மதிப்பளித்தார்

ஆயிரம் துன்பம் அருகில் வந்த போதும் - எம்மை
அண்ட விடாது அடித்து விரட்டினார் - தம்
வாழ்வினில் தோல்வி ஏற்பட்ட போதும்
வஞ்சனை சூது ஏதுமின்றி மாண்பு காத்தார்

திருமலை மண்ணில் சிறப்போடு வாழ்ந்தார் - அங்கு
சேர்த்த செல்வத்தை அங்கேயே தொண்டு செய்தார்
மீண்டுமொரு செல்வத்தைத் தேட முடியவில்லை - ஆயினும்
போன செல்வம் போனதுதான்

பெற்ற பிள்ளைக்கு ஒவ்வாத ஒன்றை
வலிந்து திணிப்பதில்லை; அலாதியான அவர்
பிறர் மனம் புண்பட என்றும் நினைப்பதில்லை
வாழ்ந்து காட்டிய ஐயாவே மீண்டுமொருக்கா சொல்லாயோ

எங்களைப் பெற்றெடுத்து ஆளாக்கி
ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம் - அது

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகளில்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை மனித வாழ்வில் நிலை நிறுத்துவோம்.

" கொல்லான் புலாலை மறுத்தானை - கை கூப்பி
எல்லாவுயிரும் தொழும்"
என்பது வள்ளுவர் வாக்கு இந்த குறள் மீது
அலாதி பிரியம். இந்தக் குறளில் வள்ளுவன்
சொன்னது போல் வாழமுடியவில்லை என்று
குறளில் சொன்ன "கொல்லாமை" விரதத்தை
யாபேரும் கடைப்பிடிக்க வேண்டுமென்று விரும்பினார்
"அது போல இன்னொரு குறள்" !

"உண்ணாமை வேண்டும் புலால் அல்லால்
பிறிதொன்றின் புண் அது உணர்வாபபெறின்"

புலால் என்பது என்ன அது ஒரு புண்தானே
ஒரு உயிரை வெட்டும்போது இரத்தம் சிந்தி
புண்ணாகிறது. இந்தப் புண்ணை எப்படி
உங்களால் உண்ண முடிகிறது என
வள்ளுவர் வினா எழுப்புகிறார். மனித
தத்துவத்தின் ஞான வேள்வியின் அறிவால் உயிரின்
உண்மைப் பொருளைக் கண்டறிந்தவன் ஒரு
நாளும் புலாலை உண்ணமாட்டான் என்பது
தெளிவு. இந்தக் குறளை விரும்பி நேசித்தார்
ஆனாலும் குறள்படி அவரால் நடக்க முடியவில்லை
ஆயினும் குறள் தரும் தத்துவத்தை
எப்பொழுதும் பேசுவார். அந்தப் பேச்சு
மூச்சு நிற்கும் வரை இருந்தது அது முடியுமா
என முயற்சிக்கும் எமது வாழ்வு தொடர்கிறது.

அறிவில் அணுக அறிவு அது நல்கி
பொறி வழி ஆசைப் புணர்ந்திட்டு
அறிவு அது ஆக்கி அடியருள் நல்கும்
செறிவொடு நின்றார் சிவம் ஆயினாரே
என்று மூலர் வாக்குப்படி நாங்கள் அமைதி அடைகின்றோம்.

மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் கதறல்...

அன்பும் அரவணைப்பும் அலை மோதும்
புன் சிரிப்பும் கொஞ்சிக் குலாவி - கூடிக்
குழைந்து விளையாடிக் குறைகள் பல தீர்த்து - அத்
திக் கெட்டும் அஞ்சாமல் இருக்க செய்தாயே
இனி எங்கு காண்போம் !

எம்மை ஆதரித்துத் துணை மேவி நின்று
நித்தம் கொழிக்கும் புவி மீது நின்று
நிழல் போல காத்தெம்மை - நல்
இனிதே வளர்த்தெடுத்தாய் - இனி எங்கு காண்போம்!

கதிர்களும் நற் சோலைகளும் நடுவே
கட்டி அணைத்து கவி பாடி - நல்
கானங்களால் தாலாட்டி - முத்தமிட்டு
கண் தூங்க வைத்தாயே - உனை இனி எங்கு காண்போம் !

அகத்தே அழகான எண்ணங்கள் தாத்தாவிற்கு
அச் சிந்தனைகள் எம் அகத்தை துளை போட்டு - அது
அன்பும் அறனும் நற்றமிழும் உடைத்தாகி
ஆர்ந்தெழுந்து அலைபாய வைத்தாயே இனி எங்கு காண்போம் !

பண்பான வார்த்தைகளால் பகிடி பல செய்து
பாங்கோடு சத்தமிட்டு பற்பலவும் உரைத்து
புத்தம் புதுக் கதைகள் பல பேசி
புதிர்போட்டு விடைகாண்பாயே இனி எங்கு காண்போம்!

நாங்கள் வாழ நன்றாகப் பார்த்து நாடு செழிக்க
நாலுபேர் மத்தியில் நிமிர்ந்து நிற்கக் காத்திருந்தாய்
நாங்கள் கொடுத்து வைக்கவில்லை
நம்மைத் தவிக்க விட்டுப் போனாயே - இனி எங்கு காண்போம்

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்று காண்பேன் ....!

எங்களோடு விளையாடுவது எவ்வளவு பிரியம் ஐயா !
எங்கள் மீது இவ்வளவு பாசத்தை ஏன் பொழிந்தாய்
பேரப்பிள்ளைகள் என்றால் எவ்வளவு ஆசை
பேத்தி என் மீது எவ்வளவு விருப்பம்

என் அப்பாவுக்கு நானொருத்தி என்றதனாலா?
இவ்வளவு கொள்ளை ஆசை
என் நினைவெல்லாம் நிற்கிறாயே ஐயா !
என்னைத் தவிக்க விட்டுப் போய் விட்டாய் ஐயா!

இனி எனக்கு யார் ஆறுதல் சொல்ல
என்னைக் காணா விட்டால் தவிப்பாயே
இப்போ நீ அங்கே என்ன செய்கிறாய் ஐயா !
இளம் வயது தவிக்கிறது திரும்ப வருவாயா !

உன் மூச்சு நிற்கையிலே உன்னருகில் நானிருந்தேன் !
உள்ளமெல்லாம் உடைந்து போனதுவே
உயிர் மூச்சு நிற்காமல் ஒரு தடவை வேண்டினேன்
உலகைக் காக்கும் கடவுள் ஏனோ மறந்துவிட்டான்

ஐயா துடிக்கிறது நெஞ்சு எரிகிறது
உன் பிரிவைத் தாங்க முடியவில்லை
உறவை ஏன் படைத்தானோ இறைவன்
நெஞ்சு கனக்கிறது ஐயா ! உன் நினைவே ஐயா !

பேத்தி
கலியுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதுவின் உள்ளக் குமுறல்

சுத்தமாய் நாம் வாழ நோயற்று இன்புற
எச்சரிக்கை செய்து எளிமையாய் இயம்பினார்
சிந்தையும் ஆற்றலும் தடையின்றி வளர
வாய்புக்கள் பல ஏற்படுத்தி தந்த ஐயாவே !

நிலையில்லா வாழ்வதனில் நின்று நிலைக்க
ஆதாரம் தேடி வைத்த அருட் செல்வா ஐயாவே !
அன்புருக உமைவிட்டு பிரியோமே
அகத்தே நின்று அழுகின்றோமே ஐயாவே மீண்டு வாரும்.

பேத்தி
பாலவிதுனா

## தாத்தா ....!

தோளில்த் தூக்கி தோழனாக்கித் துள்ளித் திரிந்தவரே
நாளில் எம்மை நயம்பட அழைத்து நன்மை தீமைகளை
சொன்னீரே. மொழியை ப்பேணி வழியைப் பேணி மேன்மை
காண வேண்டுமென்றீர் . குழியில் வீழ்ந்து
குமையாமல் குறிகள் காட்டி வாழ்ந்தீரே ஊரைப் பணேி
உறவைப் பேணி உயரச் சொன்னீரே உண்மை பேசி
உலகப் புகழை நேசி உயரலாம் என்றீரே
கண்ணை இமை காப்பது போல
எம்மைக் காத்து மகிழ்ந்தீரே - ஆனால்
சொல்லி அரனை வணங்கி ஆளாய் மிளிர வேண்டுமென்றீர்
நாவால் பேசி நாவலனாகி நாட்டில் உயர்க என்றீரே
ஓடி உழைத்துக் கோடி சேர்ந்து ஊருக்குதவுக என்றீரே
பாடித் திரிந்து பறவைகளாய் பலதும்
கற்றறிய சொன்னீரே உலகம் சுற்றி உண்மை
அறிந்து தேறிநிற்கச் சொன்னீரே தாத்தா.........!

பேத்தி
பாலவித்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் உள்ளக் குமுறல்

மாமாவே எங்கள் மாமாவே - மதிப்பு மிக்க
மாமாவே மனதில் நிறைந்துவிட்ட மாமாவே
மனதால் நினைந்து மொழியால் கடியவில்லை - அன்று
மலர் விழியில் குறி வைத்து நோகவில்லை - குமுறுகிறது இள நெஞ்சு

இருவினை போக்கி இருளகற்றி - நல்ல
குணமது கொண்டு குல விளக்கேற்றி - உயர்
குடும்ப வாழ்வுக்கு நின்றே நிலைபெற்று
குறியாய் நின்றாயே குமுறுது இள நெஞ்சு

வாழ்நாளை வந்து பார் செழித்து நல்வரவாய்
நமக்கெல்லாம் துணை தந்து நல் ஞானத்தை
கூர்ந்து ஏணிபோல் உவகை பூஃகி
நல்லாளன் நமை சேர்ந்தான் நம் நெஞ்சு பொறுக்குதையா !

அருளான சக்தி அனல் வெம்மை பொருளாக
கலை கடந்த கவசமாகி கற்றுத் தேடி
மெய்ஞானப் பொருளாகி நீடித்து
நிலமெல்லாம் நீ வாழ்ந்த கோலம் காண மீண்டும் வருவாயோ !

உன்னை எங்கள் உறவென்று சொல்லப் பெருமை
ஊரோடு நீ வாழ்ந்த வாழ்வு பெருமை
உயிர்ப்பும் மேன்மையும் உந்தன் வாழ்வு சிறக்க
உலகத்தோடு ஒட்டி வாழ்ந்தாயோ மீண்டும் வருவாயோ!

நிலவும் ஒளியும் திருநீற்றுப் பூச்சும்
நிலமென்னும் வீதியிலே நீ நடந்த கோலம்
நெஞ்சத்து நினைவுகளில் நீங்காது நிற்கிறது
நீ ஒருக்கால் மீண்டு வந்து முகம் தாராயோ!

மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனி மனக் குமுறல்...

மாசற்ற ஒளியாக மண்மீது விழுந்தாய்
மனதெங்கும் பொறியாகி மலையாகி நின்றாய்
மகிழ்வோடு விழி தாங்கி மொழி பேசினோம்
மாண்புக்கு பறை சாற்றி எழுந்தீர்களே

எங்கள் அக்காவைக் கைப்பிடித்து - அகமகிழ்ந்தீரே
எனவே அத்தான் என்று அன்போடு அழைத்தோமே
எமக்காக அயராது உழைத்தாய் - அல்லல்லறுத்து
ஆனந்தம் ஆனதுவே இன்னும் ஏன் துயரம்

அத்தான் இறந்துவிட்டார் என்ற செய்தி வந்தது
அதுதான் என்னால் நம்ப முடியவில்லை
ஆறு மாதம் முன் இங்கு வந்தேன் அத்தான்
அருட் சுகமாகவே இருந்தார்

இப்போ ஏன் இந்தச் சாவு - இன்னும்
என்னால் நம்ப முடியவில்லை இங்குதான்
இருக்கிறார் என எண்ணத் தோன்றுகிறது
அன்று வந்தபோது நான் செத்தால் வருவாயா எனக் கேட்டார்

நான் வருவேன் என்றேன்
கனடாவில் இருந்து வருவதென்றால் தூரம்தான்
நான் என் அத்தானுக்காக.....................
நான் சொன்ன சொல்லுக்காக...

கனடாவில் இருந்து வந்துவிட்டேன்
நாம் அழுத போது எமக்காய் அழுதார்
நாம் சிரித்த போது எம்மோடு சிரித்தார்
நான் வந்தபோது இரண்டுமில்லை. தவிக்கின்றேன்.

அன்புடன்
இராசம்மா
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நினைவுகள் இங்கே என் தலையடியில்...!

ஐயா அங்கு பிரச்சினையாக உள்ளது
நான் இப்போ வரவில்லை என்றேன்
நீ வா நான் பார்த்துக் கொள்கின்றேன்
அங்கு வந்த எனக்குத் துணையாக இருந்தீர்கள்
அது போதாதென்று நான் எங்கிருந்தாலும் எனக்குத்
துணையாக இருப்பதற்குத்தான் நீங்கள் அங்கு சென்றீர்களா?
இருப்பேன் இன்னும் இரண்டு வருடங்கள் என்றீர்களே !
என்பதனால் நான் உங்களை இங்கே? அங்கே?
எங்கோ? எல்லாம் தேடுகின்றேன்
புரிகிறது ஐயா ! நீங்கள் இனி இங்கு இல்லை என்று தெரிகிறது
நீங்கள் அங்கே ஆண்டவன் காலடியில். உங்கள் நினைவுகள்
இங்கே என் தலையடியில்..................!

மகன்
யோகேஸ்வரன்
கனடா.

## முன்னேற வழி

*சுவாமி சிவானந்தர்.*

- *சிறிய விஷயங்களுக்காக மனக்கலக்கம் அடையாதீர்கள்.*
- *ஒத்துப்போகும் தன்மையையும், இனிய பண்புகளையும் வளருங்கள்.*
- *அப்படிப் பேசுவதனால், நீ அவனுக்குக் கேடு இழைக்கின்றாய், உனக்குக் கேடு இழைத்துக் கொள்கின்றாய்.*

## கண்டிப்பதைத் தவிர்த்திடுங்கள்

*டேல் கார்னஜி*

- *ஒருவனைக் கண்டிப்பது ஆபத்தானதாகும். ஏனென்றால்.*
- *அது அவனுடைய தன்மானத்தை, பெருமையைப் புண்படுத்துகின்றது.*
- *அது அவனுடைய மனக்கசப்பை, ஆத்திரத்தை, கோபத்தைத் தூண்டுகின்றது, கிளறுகின்றது, மேலோங்கச் செய்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவினர் கதறல்

தன்னை அறியத் தனக்கு ஒரு கேடு இல்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே !

என்பது "திருமூலரின் வாக்கு இது எங்கள் ஐயாவுக்கும்
பொருந்துகிறது"

நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்
திறமையுடன் தொண்டாற்றி - தொழுதிங்கு
வாழ்ந்து துணை நின்ற எல்லோர்க்கும் துணையாகி
விண்ணென்று விரைந்திட்டீரே வேகுதய்யா நெஞ்சு

சுற்றம் சூழ்ந்து உற்றார் உறவுகளை நேசித்து
பல பேரும் மறவாத பந்த பாசங்களைத் தேடி
காணும்போதெல்லாம் களிப்புற்று மகிழ்ந்து
வாடிய போது வாரி இறைத்தீரே வாடுதையா நெஞ்சு

நாளும் பொழுதும் நன்குணர்ந்து நல்லார்
பாசத்தை கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நம் இனத்தை வாழ வைத்து நயம் மிக்க
செயல்களால் நம்மில் நுழைந்தாய் நம் நெஞ்சு வாடுதே

உறவுக்கு ஒருவனாகி உள்ளத்தில் இருப்பிடமாகி
வாழத் துடித்த எமக்கு வழிகாட்டியாகி - உதய
வானத்தில் ஆதவனின் வெளிச்சம் போல
உன் வாழ்வும் இருந்ததையா உனைக்
காணாமல் நெஞ்சு வெடிக்குதையா

நாளும் மறவோம் நல்ல தமிழாக நீ தவழ்ந்தாய்
நாதனை நாளும் தொழுது உன் அமைதிக்கு
நாங்கள் பிரார்த்திப்போம் - ஆனால்
நாம் ஏதும் நினைத்தாலும் உன் நாமம் மறக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1000 ஆண்டுகளுக்கு முன்னர் திருக்காளத்தி எனும் சிவத்தலத்தில் திருவெண்காடர் [பட்டினத்தார்] அவர்களால் பாடப்பெற்ற

# சில விருத்தப்பாக்கள்

"பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பாட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச்சாம் பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் கயிலாயபுரி காளத்தியே!

பொன்னால் பிரயோசனம் பொன் படைத்தார்க்குண்டு. பொன் படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டு. அத்தன்மை போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம் உண்டு. உனைப் பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தி ஈச்சுரனே!

வாளால் மகவரிந்தூட்ட வல்லேன் அல்லன். மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன். தொண்டு செய்த
நாளாறில் கண் இடத்து அப்பவல்லேன் அல்லன். நான் இனி சென்று
ஆளாவ தெப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே?

முப்போது அன்னம் புசிக்கவும் தூங்கவும் மோகத்தினால்
செப்போது இளமுலையாருடன் சேரவும் சீவன்விடும்
அப்போது கண்கலக்கப்படவும் வைத்தாய். ஐயனே
எப்போது காணவல்லேன்? திருக்காளத்தி ஈச்சுரனே!

இரைக்கே இரவும் பகலும் திரிந்திங்கு இளைத்து மின்னார்
அரைக்கே அவலக் குழியருகே அசும்பு ஆர்த்தொழுகும்
புரைக்கே உழலும் தமியேனை ஆண்டருள் பொன் முகிலிக்
கரைக்கே கல்லால் நிழற்கீழ் அமர்ந்தருள் காளத்தியே!

நாறும் குருதிச் சலதாரை நாள் தொறும் சீழ்வடிந்தே
ஊறும் மலக்குழி காமத் துவாரம் ஒளிந்திடும் புண்
தேறுந் தசைப்பிளப் பந்தரங் தந்துள சிற்றின்பம் விட்டு
ஏறும் பதந்தருவாய் திருக்காளத்தி ஈச்சுரனே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழிப்புச் சந்தனம்

"எங்கள் ஐயா நல்ல வேதாந்தியாக திகழ்ந்தார். நிலையாமை பற்றி அடிக்கடி கூறுவார் திருவெண்காடர் (பட்டினத்தார்) அருளிய உடற்கூற்று வண்ணம் அவரது எண்ணத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இப்பாடல்களை விரும்பி படிப்பதுண்டு"

தனதன தானே தனதன தானே
தந்த தனந்தன தந்த தனந்தசிறி
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த
தந்ததன தான தனதானனா

ஒரு மடமாது மொருவனுமாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
உணர்வு கலங்கி யொழுகியவிந்து
ஊறுசு ரோணிக மீது கலந்து
பனியிலோர் பாதி சிறுதுளிமாது
பண்டியல் வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கபடமி தென்று
பார்வைமெய் வாய் செவி கால்கைகளென்ற
உருவமுமாகி வுயிர்வளர் மாதம்
ஒன்பது மொன்று நிறைந்து மடந்தை
உதரமகன்று புவியல் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து
மகளிர்கள் சேனை தரவனை யாடை
மண்பட வுந்தியு தைந்து கவிழ்ந்து
மட மயில் கொங்கை யமுதமருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளி நகை யூற லிதழ்மட வாரு
வந்து முகந்திட வந்துத வழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியிலிருந்து மழலைமொ ழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப
உடைமணி யாடை யரைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களோடு உண்டு
தெருவிலி ருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரோடோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே
உயர் தரு ஞான குருவுப தேச
முந்தமி ழின் கலை யுங்கரை கண்டு
வளர் பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து
மயிர் முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொனி லங்கு பணிகள ணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க
மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழியவெ றிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவம யங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுத லாகிய முதுபொருளாயி
ருத்தத னங்களும் வம்பிலிழந்து
மதனசு கந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்களிருண்டு
வயது முதிர்ந்த நரை திரை வந்து
வாதவி ரோதகு ரோதமடைந்து

செங்கையினி லோர்த டியுமாகியே,1/2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது போவ தொருமுது கூனு
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியும ழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து
துயில்வரு நேரமிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சு மலர்ந்து வறண்டு
துகிலுமி ழந்து சுணையும ழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகல வென்று மலசலவந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து
தெளிவுமி ராமல் உரைதடு மாறிர
சிந்தையு நெஞ்சமுலைந்து மருண்டு
திடமுமு லைத்து மிகவும லைந்து
தேறிந லாதர வேதெனெ நொந்து
மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டமினியென தொந்த
மேதினி வாழ்வுநி லாதினி நின்ற
கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கிவி ழுந்துகை கொண்டுமொ ழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு சுவாசமு நின்று

நெஞ்சுதடு மாறி வருநேரமே 3/4

வளர்பிறை போல எயிறுமு ரோம
முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்ச
மனதுமி ருண்ட வடி வுமி லங்க
மாமலை போல்யம சூதர்கள் வந்து
வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் காலம றிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்சுப றந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று
பலரையு மேவிமுதியவர் தாமி
ருந்தச வங்கமு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களபமணிந்து
பாவக மேசெய்து நாறுமு டம்பை
வரிசைகெ டாம லெடுமென.வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகிந டந்து சுடலைய டைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி யழல்கொடு போட
வெந்துவி ழுந்து முறிந்துநி ணங்கள்
உருகியெ லும்பு கருகிய டங்கி
ஓர்பிடி நீறுமிலாதவு டம்பை

நம்மடி யேனை யினியாளுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிசங்கரரின் ஞானத்தின் நுழைவாயில்

"அத்வைதம்" என்ற மிக உயர்ந்த சத்தியத்தை உலகுக்கு உணர்த்த கயிலைநாதனான சிவனே ஆதிசங்கரராக புவியில் அவதரித்தார் என்பார்கள். வைதிக மதம் என்ற வேத மதத்தை (சநாதனதர்மத்தை) உலகில் நிலைநிறுத்தி இருள் மயமான இதயங்களில் ஞான ஒளி ஏற்றி வைத்த ஞானக்கதிரவன் ஆதிசங்கரர். அவர் உலகிற்கு உணர்த்திய அத்வைதம் மிக நுட்பமானது, விஞ்ஞான பூர்வமானது.

பிரம்மம் ஒன்றே சத்தியம் ஜகத்து மித்யை என்ற சத்தியத்தை நுட்பமான அறிவு, ஆய்வுர, அனுபவ பூர்வமான வாதங்களால் நிரூபித்தவர். ஆத்மனைப் பற்றிய அறிவும் பின்னர் பயிற்சியால் அனுபவமும் பெற்றவரே பிறப்பு இறப்பு என்ற வட்டத்திலிருந்து விடுபட்டு முக்தியைப் பெறலாகும்.

இத்தகைய உயர் நிலையை அடைய ஆதிசங்கரரால் அளிக்கப்பட்ட அரிய ஞானப் பொக்கிசமே "ப்ரச்னோத்ர ரத்தினமாலிகா" என்ற நூலாகும். குருசீடர்களுக்கிடையே நடக்கும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளது. "இந்நூலை தினமும் பயின்றால் வாழ்வின் நிலையாமை; மற்றும் நித்திய அநித்தியங்களின் இயல்பை புரிந்து கொண்டு மனதில் தெளிவு தோன்ற வாழ்வின் பயனை முழுமையாக்கிக் கொள்ள முடியும்" என்பது சான்றோரின் அனுபவமாகும்.

1. கேள்வி : அறியத்தக்கது எது?
   பதில் : குருவின் வாக்கு
   கேள்வி : ஒதுக்கத் தக்கது எது?
   பதில் : அகார்யம் (செய்யத் தகாததைச் செய்தல்)
   கேள்வி : குரு யார்?
   பதில் : சத்தியத்தை உணர்ந்தவர்; தன்னை அண்டிய சீடனின்நலத்திற்காகஇடைவிடாதுபாடுபடுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கேள்வி : அறிவுள்ளவன் விரைந்து செய்யவேண்டிய யாது?
பதில் : பிறப்பு, இறப்பென்ற சம்சாரத் தொடரைக் கத்தரித்தல்
கேள்வி : முக்தி என்னும் மரத்துக்கு வித்து எது?
பதில் : உள்ளதை உள்ளபடி அறிந்து செயலில் ஈடுபடுதல்

3. கேள்வி : நலம் விளைவிப்பது எது?
பதில் : தர்மம்
கேள்வி : எவர் தூயவர்?
பதில் : உள்ளத்தால் தூய்மையானவரே உண்மையில் தூயவர்
கேள்வி : எவர் பண்டிதர்?
பதில் : விவேகி
கேள்வி : எது விஷம்?
பதில் : சான்றோரின் சொல்லைப் புறக்கணித்தல் (குரு சொன்ன வார்த்தைகளை அலட்சியப்படுத்துதல்)

4. கேள்வி : சம்ஸாரத்தில் சாரம் எது?
பதில் : அடிக்கடி இதனை நினைப்பதே' (அதாவ ஸம்ஸாரத்தில் ஸாரமேது? என அடிக்கடி நினைப்பதால் பற்று விட்டுப் போகும்)
கேள்வி : மனிதன் வேண்ட வேண்டியது யாது?
பதில் : தான், பிறர் என இருவரின் நலத்திற்காகவும் முயலும் பிறவி.

5. கேள்வி : கள் போல மயக்குவது எது?
பதில் : பற்றுதல்
கேள்வி : திருடர்கள் யார்?
பதில் : புலன்களை ஈர்க்கும் விஷயங்கள்
கேள்வி : சம்சாரக் கொடி எது?
பதில் : ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : பகைவன் யார்?
பதில் : சோம்பல்

6. கேள்வி : அனைவரும் அஞ்சுவது எதனிடம்?
பதில் : மரணத்திடம்
கேள்வி : குருடனிலும் குருடன் யார்?
பதில் : ஆசையுள்ளவன்
கேள்வி : சூரன் யார்?
பதில் : தீயவழியில் மனம் போகாது தடுப்பவன் பெண்டிர்தம் பார்வையெனும் பாணங்களால் அடிபடாதவன்

7. கேள்வி : செவியால் உண்ணும் அமுதம் எது?
பதில் : சாதுக்களின் உபதேசம்
கேள்வி : மதிப்புக்கு மூலம் எது?
பதில் : எதனையும், எவரிடத்தும் கேளாதிருத்தல்

8. கேள்வி : அளவிட முடியாதது எது?
பதில் : பெண்களின் நடத்தை
கேள்வி : திறமைசாலி யார்?
பதில் : பெண்களின்நடத்தையால்வஞ்சிக்கப்படாதவர்
கேள்வி : துயரம் எது?
பதில் : திருப்தி இன்மை
கேள்வி : இழிவு எது?
பதில் : கீழ் மகனிடம் யாசிப்பது.

9. கேள்வி : உயர்ந்த ஜீவனம் எது?
பதில் : குற்றமின்மை
கேள்வி : அறிவின்மை என்பது எது?
பதில் : தனது முன்னேற்றத்தில் முயற்சியும் பயிற்சியும் இன்றி இருத்தல்
கேள்வி : விழிப்புடையோர் எவர்?
பதில் : விவேகமுள்ளவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : உறக்கம் எது?
பதில் : மூடத்தனம்

10. கேள்வி : தாமரை இலைத் தண்ணீர் போல் நிலையில்லாதன எவை?
பதில் : இளமை, செல்வம், ஆயுள்
கேள்வி : சந்திரகிரணம் போன்றவர் யார்?
பதில் : சான்றோரே!

11. கேள்வி : நகரம் எது?
பதில் : பிறர் வசப்படல்
கேள்வி : சௌக்கியம் எது?
பதில் : ஸர்வசங்கபரித்யாகம்
கேள்வி : சாதிக்க வேண்டியது யாது?
பதில் : உயிர்களுக்கு நலம் செய்தல்
கேள்வி : உயிரினங்களுக்கு விருப்பமுள்ளது எது?
பதில் : பிராணன்

12 கேள்வி : எது அனர்த்தத்தைத் தரும்?
பதில் : அகம்பாவம்
கேள்வி : எது சுகத்தைத் தரும்?
பதில் : நல்லோர் இணக்கம்
கேள்வி : எல்லா துக்கங்களையும் களைபவர் எவர்?
பதில் : எதனையும் வேண்டாம் என விடுபவர்

13. கேள்வி : மரணம் அல்லது மரணத்திலும் பெரியது எது?
பதில் : அசட்டுத்தனம்
கேள்வி : விலைமதிக்க முடியாதது எது?
பதில் : சமயமறிந்து கொடுத்தது?
கேள்வி : சாகும் வரை குத்துவது எது?
பதில் : இரகசியத்தில் செய்த பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கேள்வி : முயற்சி எதன் பொருட்டிருக்க வேண்டும்?

பதில் : கல்விப் பயிற்சி, நல்லமருத்துவ தானம் செய்தல் இவற்றிற்காக

கேள்வி : அலட்சியம் செய்ய வேண்டியது எது?

பதில் : கெட்டவர்கள், பிறர்மனை பிறர்பொருள்

15. கேள்வி : இரவும் பகலும் நினைக்க வேண்டியது எது?

பதில் : சம்ஸாரத்தில் சாரமில்லை என்பதையே

கேள்வி : விரும்பிச் செய்ய வேண்டியது எது?

பதில் : தீனர்களிடத்தில் கருணையும் சாதுக்களின் நட்பும்

16 கேள்வி : உயிரே போவதாயினும் எவரின் ஆத்மாவை நல்வழிப்படுத்த முடியாது?

பதில் : போக்கிரிகள், எப்போதும் சந்தேகப் படுவோரை அழுமூஞ்சி நன்றி இல்லாதவன்

17. கேள்வி : சாது யார்?

பதில் : நல்ல நடத்தையுடையவர்

கேள்வி : எவன் கீழ் மகன்?

பதில் : தீய நடத்தையுள்ளவன்

கேள்வி : உலகைவெல்ல வல்லவர் யார்?

பதில் : சத்தியமும் பொறுமையும் உள்ளவர்

18. கேள்வி: எவரைத் தேவர்களும் தொழுவர்?

பதில் : தயை உடையவரை

கேள்வி: எதைக் கண்டு அஞ்ச வேண்டும்?

பதில் : சம்ஸாரமாகிய காட்டைக் கண்டு நல்லறிவுள்ளவர் அஞ்ச வேண்டும்.

19. கேள்வி : ஜீவராசிகள் எவருக்கு வசப்படும்?

பதில் : சத்தியமும், பிரியமும் மிக்க சொற்களைப் பேசும் பணிவுள்ளவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : நிலைத்து நிற்க வேண்டியது எங்கு?

பதில் : காணப்படும் மற்றும் காணப்படாத இகபரம் என்னும் இரண்டிலும் பயனுள்ள வழியில்

20. கேள்வி : குருடன் யார்?

பதில் : படித்திருந்தும் தீச்செயல் செய்பவன்

கேள்வி : செவிடன் யார்?

பதில் : தனக்கு நல்லது சொல்பவரின் சொல் கேளாது விலக்குபவன்

கேள்வி : ஊமை யார்?

பதில் : இனிமையான வார்த்தைகளைச் சரியான காலத்தில் சொல்லத் தெரியாதவன்

21. கேள்வி : தானம் என்பது யாது?

பதில் : கேட்காது கொடுப்பது

கேள்வி : சிநேகிதர் யார்?

பதில் : பாபம் செய்யாது தடுப்பவர்

கேள்வி : அழகு எது?

பதில் : சீலம்

கேள்வி : வாக்கிற்கு அழகு எது?

பதில் : சத்தியம்

23. கேள்வி : மின்னல் ஒளி போல் சஞ்சலமானவை யாவை?

பதில் : தீயார் நட்பும் பெண்டிரும்

கேள்வி : கலிகாலத்திலும் குல ஒழுக்கத்திலிருந்து சலிக்காத வர் யார்?

பதில் : சான்றோரே.

24 கேள்வி : சிந்தாமணி போல் கிடைத்தற்கரியது எது?

பதில் : சதுர் பத்ரம் (பத்ரம் என்றால் சுபம், மங்களம்)

கேள்வி : அந்த நான்கு பத்ரம் - எவையென அறிஞர் சொல்வர்?

பதில் : பிரியமான சொற்களோடு செய்யப்படும் தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகந்தையற்ற ஞானம், மன்னிக்கும் மனப் பான்மையுடன் கூடிய சௌர்யம் (வீரம்) தியாகத்துடன் கூடிய செல்வம்.

25. கேள்வி : பரிதாபத்திற்குரியது எது?
பதில் : தனக்கும் பிறருக்கு இகத்துக்கும் பரத்துக்கும் உதவாது நிறைய செல்வத்தை வைத்திருத்தல்.
கேள்வி : வசதிகள் மிகுந்துள்ள போது புகழத்தக்கது எது?
பதில் : உதாரகுணம்
கேள்வி : அறிவுடையோர் யாரை பூஜிப்பர்?
பதில் : இயல்பாகவே பணிவுள்ளவரை

26. கேள்வி : ஒருவர் பிறந்தகுலமென்னும் தாமரை எந்த சூரியனால் ஆனந்தத்துடன் பிரகாசிக்கிறது?
பதில் : நிறை குணத்தோடும் பூரணப் பணிவோடும் இருப்பவரைக் கண்டால் குலமென்னும் தாமரை பிரகாசிக்கிறது.
கேள்வி : இந்த பிரபஞ்சம் எவருக்கும் வசப்படும்?
பதில் : இனிமையாகப் பேசக் கற்றுக்கொண்டு தர்ம நெறி தவறாது நடப்பவருக்கு.

27. கேள்வி : வித்வான்களின் மனத்தைக் கவர்வன யாவை?
பதில் : நல்ல கவிதையும்; புத்தி என்னும் வனிதையும்
கேள்வி : விபத்து வெனைத் தீண்டாது?
பதில்: பெரியோர் வார்த்தையை அனுசரித்து நடப்பவனையும், அடக்கமுள்ளவனையும்

28. கேள்வி : லக்ஷ்மி யாரை விரும்புவாள்?
பதில் : சுறுசுறுப்பான சித்தமுடைய நீதி நெறி பிறழா தவரை
கேள்வி : திருமகள் எவரை விரைவில் விட்டு நீங்குவாள்
பதில் : பிராமணரையும், குருவையும், தேவர்களையும்நிந்திக்கும்சோம்பேறித்தனமுடையவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 கேள்வி: வசிக்கத்தக்க இடம் எது?

பதில் : நல்லவர்களின் சமீபத்தில் அல்லது காசி க்ஷேத்திரத்தில்

கேள்வி : விட்டு விலக வேண்டிய தேசம் எது?

பதில் : கீழ் மக்களுள்ளதும் உலோபியான மன்னன் ஆளும் நாடும் ஆகும்.

30. கேள்வி : எதனால் மனிதன் துக்கமில்லாதவனாவான்?

பதில் : நல்ல அனுசரிப்புள்ள மனைவியாலும் நிலையான ஐசுவரியத்தாலும்

கேள்வி : வருந்தத்தக்கவன் யார்?

பதில் : பொருளிருந்தும் ஈயாதவன்

31. கேள்வி : இகழ்ச்சிக்குக் காரணம் யாது?

பதில் : தாழ்ந்தவர்களிடம் யாசிப்பது

கேள்வி : ஸ்ரீ ராமனை விட சூரன் யார்?

பதில் : காமனின் அம்புகளால் அடிக்கப்பட்டும் கன்னியை இழக்காதவன்

32. கேள்வி : இரவும் பகலும் சிந்திக்கத்தக்கது எது?

பதில் : பகவானின் திருவடிகள்; ஜனன மரண வடிவான சம்சாரமல்ல

கேள்வி : கண்ணிருந்தும் குருடர் யார்?

பதில் : நாஸ்திகர்களான மனிதர்கள்

33 கேள்வி: முடவன் யார்

பதில் : முதிர்ந்த வயதில் தீர்த்த யாத்திரை போகின்றவன்

கேள்வி: முக்கியமான தீர்த்தம் எது?

பதில் : மன அழுக்கை தீர்ப்பது

34 கேள்வி: எப்போதும் நினைக்கத்தக்கது எது?

பதில் : ஹரி நாமமோ் மிலேச்ச மொழியல்ல

கேள்வி: நல்லறிவுடையவனால் சொல்லத் தகாதது எது?

பதில் : பிறரது குற்றமும் அசத்தியமும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35 கேள்வி : மனிதர்களால் சம்பாதிக்கத் தக்கன யாவை?

பதில் : கல்வி, செல்வம், வலிமை, புகழ், புண்ணியம் ஆகியவை.

கேள்வி : எல்லாக் குணங்களையும் அழிப்பது எது?

பதில் : உலோபம்

கேள்வி : பகைவன் யார்?

பதில் : காமம்

34. கேள்வி : எந்த அவை விலக்கத் தக்கது?

பதில் : வயது முதிர்த்த அறிஞர் அல்லது அமைச்சர் இல்லாத அவை

கேள்வி : மனிதன் என்பதால் விழிப்போடிருத்தல் வேண்டும்?

பதில் : அரச சேவையில்

36. கேள்வி : பிராணனை விட பிரியமானது எது?

பதில் : குலதர்மமும் சாதுக்களின் உறவும்

கேள்வி: காக்கத்தக்கது எது?

பதில் : புகழ் கற்புடைப் பெண்டிர் சுய அறிவு

37. கேள்வி : உலகத்தில் கற்பகக் கொடி போன்றது எது?

பதில் : தகுதி வாய்ந்த சீடனுக்கு அர்ப்பணம் செய்யும் கல்வி

கேள்வி : அழியாத வட விருஷம் போன்றது எது?

பதில் : விதிப்படி தகுதியானவருக்குக் கொடுக்கப் படும் தானம்.

38. கேள்வி : எந்த ஆயுதம் எல்லாரிடமும் உள்ளது?

பதில் : யுத்தி

கேள்வி : எல்லாருக்கும் தாயார் யார்?

பதில் : பசு

கேள்வி : எது சேனை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : தைரியம்

கேள்வி: எது இயமன்?

பதில் : கவனமில்லாதிருப்பது

39. கேள்வி: விஷம் எங்குள்ளது?

பதில் : தீயவரிடம் உள்ளது.

கேள்வி : தீட்டு எது?

பதில் : கடன்தான்

கேள்வி: அபாயம் (பயமற்ற தன்மை) எது?

பதில் : வைராக்கியம் (பற்றற்ற நிலை)

கேள்வி: எது பயம்?

பதில்: செல்வம்தான்

40. கேள்வி: கிடைத்தற்கரியது எது?

பதில் : ஹரிக்ப

கேள்வி: எது பாதகம்?

பதில் : துன்புறுத்தல்

கேள்வி : பகவானுக்கு யாரிடத்து பிரியம் அதிகம்?

பதில் : தானும் மனதால் துன்புறாமல், பிறருக்கும் துன்பம் செய்யாமல் துன்பம் நினைக்காமல் இருப்பவரிடம்

41. கேள்வி : எதனால் காரியசித்தி உண்டாகிறது?

பதில் : தவத்தினால்

கேள்வி : புத்தி எவ்விடத்திலுள்ளது?

பதில் : வேதமோதுவோரிடம்

கேள்வி : நிஜமான புத்தி எது?

பதில் : சான்றோரைச் சார்ந்து அவர்களுக்கு தொண்டு செய்து பெறும் புத்தி

கேள்வி: பெரியோர் யார்?

பதில் : அறத்தின் நுட்பமறிந்தவர் (தர்மத்தின் தத்துவமறிந்தவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. கேள்வி : புகழ் பெற்றவருக்கு மரணத்தினும் பெரியது எது?

பதில் : அபகீர்த்தி

கேள்வி : எவர் சுகப்படுவர்?

பதில் : செல்வந்தவர் தனமுள்ளவர்

கேள்வி : செல்வம் என்பது எது?

பதில் : எதனால் விரும்பியது நிறைவேறுமோ அது

43. கேள்வி : அனைத்து சுகங்களுக்கும் மூலம் எது?

பதில் : புண்ணியம்

கேள்வி : துக்கத்திற்கு மூலம் எது?

பதில் : பாவம்

கேள்வி : ஐசுவர்யம் யாருக்கு உண்டாகும்?

பதில் : ஈசனை பக்தியுடன் ஆராதிப்பவருக்கு

44. கேள்வி : எவர் முன்னேறுவார் வளர்வார்?

பதில் : விநயமுடையவர்

கேள்வி : எவர் நஷ்டமடைவார்?

பதில் : கர்வமுள்ளவர்

கேள்வி : எவரை நம்பக் கூடாது ?

பதில் : எப்போதும் பொய் சொல்பவரை

45. கேள்வி : பொய் சொல்வது எப்போது பாவமல்ல

பதில் : தர்மத்தைக் காக்கச் சொல்லப்படும் பொய் பாவமல்ல

கேள்வி : எது தர்மம்?

பதில் : தமது மரபில் மூத்தோர்களில் நல்லொழுக்க நெறியில் நின்ற சான்றோர் கடைப்பிடித்த தர்மமே நமக்கும் தர்மம்.

46 கேள்வி : சாவுக்கு பலம் யார்?

பதில் : தெய்வம்

கேள்வி : சாது யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : எப்போதும் நிறைந்த மனத்தோடு திருப்தியாக இருப்பவர்

கேள்வி : தெய்வம் என்பது என்ன?

பதில் : ஒருவர் செய்த நல்வினையே

கேள்வி : நல்வினை உடையவர் யார்?

பதில் : நல்லவர்களால் பாராட்டப்படுகின்றவர்.

47. கேள்வி : இல்லறத்தில் நண்பர் யார்?

பதில் : மனைவி

கேள்வி : இல்லறத்தார் யார்?

பதில் : யக்ஞங்களைச் செய்பவர்

கேள்வி : யக்ஞம் என்பது என்ன?

பதில் : செய்யப்பட வேண்டியது என மறைகளால் விதிக்கப்பட்டு எது நமக்கு ச்ரேயஸைத் தருகிறதோ அது

48. கேள்வி : கர்மானுஷ்டானங்கள் எவருக்குப் பலிக்கும்?

பதில் : ஆசாரமுள்ளவராகவும் சிஷ்டராகவும் இருப்பவர்களுக்கு

கேள்வி : சீடர் யார்?

பதில் : மறைகளைப் பிரமாணமாக நம்புகின்றவர்

கேள்வி : வாழ்ந்தும் மடிந்தவர் யார்?

பதில் : கர்மங்களைப் புறக்கணித்தவர்.

49. கேள்வி : பேறு பெற்றவர் யார்?

பதில் : துறவி

கேள்வி : பூசிக்கத்தக்கவர் யார்?

பதில் : படித்து, சாதுவாக இருப்பவர்

கேள்வி : யாரை வணங்க வேண்டும்?

பதில் : வள்ளலை

கேள்வி : வள்ளல் யார்?

பதில் : யாசிப்பவருக்கு திருப்தியாகத் தருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. கேள்வி : உடலெடுத்தவருக்கு பெரிய பாக்கியம் எது?
பதில் : ஆரோக்கியம்
கேள்வி : பயன் எவருக்குக் கிட்டும்?
பதில் : முயற்சி உடையவருக்கு
கேள்வி : பாவம் யாருக்கு வராது?
பதில் : எப்போதும் ஜபிப்பவருக்கு
கேள்வி : நிறை நிலை அடைந்தவர் யார்?
பதில் : நல்ல பிள்ளையை உடையவர்?

51. கேள்வி : செய்யக் கடினமானது எது?
பதில் : மனதை இடைவிடாது தடுத்து கட்டிப் போடுவது
கேள்வி : சரியான பிரம்மச்சாரி யார்?
பதில் : ஊர்த்து ரேதஸ் உடையவர்.

52. கேள்வி : பரதேவதை யார்?
பதில் : ஞான ரூபியான அம்பிகை
கேள்வி : ஜகத்திற்குத் (பர்த்தா , தாங்கிக் காக்கும்) தலைவன் யார்?
பதில் : சூரியன்
கேள்வி : அனைவரின் வாழ்க்கைகும் காரணம் எது?
பதில் : மழை

53. கேள்வி : சூரன் யார்?
பதில் : பயப்பட்டவரைக் காப்பவர்
கேள்வி : ஜகத்குரு யார்?
பதில் : சம்பு
கேள்வி : ஞானம் எங்கிருந்து கிடைக்கும்?
பதில் : சம்புவிடமிருந்தே

54. கேள்வி : மோட்சம் எங்கிருந்து உண்டாகும்
பதில் : முகுந்தனின் பக்தியால்
கேள்வி : முகுந்தன் யார்?
பதில் : அவித்தையைக் கடக்கும்படி செய்பவர்
கேள்வி : அவித்தை என்பது என்ன?
பதில் : ஆத்மாவை மறப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. கேள்வி : யாருக்கு துக்கமில்லை?
பதில் : கோபமற்றவருக்கு
கேள்வி : சுகம் எது?
பதில் : உள்ளம் மகிழ்ந்திருத்தல்
கேள்வி : இராஜா யார்?
பதில் : பிறர் மனத்தை மகிழச் செய்பவர்
கேள்வி : நாய்க்கு ஒப்பானவர் யார்?
பதில் : கீழ் மக்களிடம் தொண்டு செய்பவர்.

56. கேள்வி : மாயையை அடக்கி ஆழ்பவர் யார்?
பதில் : பரமேசுவரன்
கேள்வி : இந்திர ஜாலம் எது?
பதில் : பிரபஞ்சமே
கேள்வி : கனவு போன்றது எது?
பதில் : விழிப்பு நிலையில் செய்யும் காவியங்கள்
கேள்வி : சத்யம் எது?
பதில் : பரம்பொருள்

57. கேள்வி : மித்யை எது?
பதில் : அறிவினால் (ஞானத்தினால்) அழிவது
கேள்வி : இருப்பற்றது எது?
பதில் : முயல்கொம்பு முதலியன
கேள்வி : நிஜமென்றும் பொய்யென்றும் சொல்ல முடியாதது எது?
பதில் : மாயை
கேள்வி : மாயையால் கற்பிக்கப்படுவது எது?
பதில் : த்வைதம்

58. கேள்வி : பரமார்த்திகம் எது?
பதில் : அத்வைதம்
கேள்வி : அஞ்ஞானம் ஏற்படக் காரணம் என்ன?
பதில் : அதற்குத் துவக்கம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : உடம்புக்கு சக்தியைக் கொடுப்பது எது? (உடம்பு தோன்றக் காரணமானது எது?)

பதில் : பிராரப்தம் என்ற கர்மா

கேள்வி : அன்னம் எதைக் கொடுக்கிறது

பதில் : ஆயுள்

59. கேள்வி : பிராமணர் யாரை உபாசிக்க வேண்டும்?

பதில் : காயத்ரி, சூரியமண்டலம், அக்னி இவற்றில் உள்ள சம்புவை

கேள்வி : காயத்ரி, சூரியமண்டலம், அக்னி, சம்பு இவர்களிடம் உள்ளது எது?

பதில் : அந்த சிவ தத்துவமே.

60. கேள்வி : கண்கண்ட தேவதை யார்?

பதில் : தாய்

கேள்வி : பூசனைக்கு உரிய குரு யார்?

பதில் : தந்தை

கேள்வி : அனைத்து தேவ வடிவானவர் யார்?

பதில் : ஞான, கர்மஸித்தி அடைந்த அந்தணர்

61. கேள்வி : குலம் அழிவதற்குக் காரணம் என்ன?

பதில் : சாதுக்களின் மனத்தில் துன்பத்தை உண்டாக்கும் செயல்

கேள்வி : யாருடைய சொல் பலிக்கும்?

பதில் : சத்திய விரதம், மௌனவிரதம், க்ஷமை ஆகியவற்றை உடையவர்களின் சொல்.

62. கேள்வி : பிறவிக்குக் காரணம் என்ன?

பதில் : விஷயத்தில் பற்று

கேள்வி : மறுபிறவி எது?

பதில் : புத்திரன்

கேள்வி : தவிர்க்க முடியாதது எது?

பதில் : மரணம்

கேள்வி : காலை எங்கே வைக்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்   :  பரிசுத்தமான இடத்தில்.

63. கேள்வி :  அன்னதானத்திற்குத் தக்கவர் யார்?

பதில்   :  பசித்தவர்

கேள்வி :  யாரை அர்ச்சிக்க வேண்டும்

பதில்   :  பகவதவத்தை

கேள்வி :  பகவான் யார்?

பதில்   :  சங்கரரும், நாராயணருமான ஒரே மூர்த்தி

64. கேள்வி :  பகவத் பக்திக்குப் பலனென்ன?

பதில்   : பகவானின் லோகத்தையும் தன்னையும் அறிதலே

கேள்வி :  மோட்சம் எது?

பதில்   :  அவித்தையை அழித்தல்.

கேள்வி :  அனைத்து வேதங்களுக்கும் பிறப்பிடம் எது?

பதில்   :  'ஓம்' என்ற பிரணவம்"அரியும் சிவனும் ஒன்றே என்பது ஆதிசங்கரரின் முடிவு அதனை தன் வாழ்நாளில் சீடர்களுக்கு விளக்கி நிறைவு செய்தார் என்பது இங்கு கவனிக்கத் தக்கது"

"அரியும் - சிவனும் ஒன்றே என்பது
ஆதிசங்கரரின் முடிவு. அதனை
தன் வாழ்நாளில் சீடர்களுக்கு விளக்கி
நிறைவு செய்தார் என்பது இங்கு
கவனிக்கத்தக்கது".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

| மக்கள் | மருமக்கள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|
| கனகலிங்கம் | நாகேஸ்வரி | கலியுகா |
| பாலசரஸ்வதி | நவரட்ணசிங்கம் | பாலகமல் |
| | | பாலநிமல் |
| | | பாலவிமல் |
| | | பாலவித்யா |
| | | பாலவிதுனா |
| பாலசுலோசனா | தவேந்திரராசா | தனு |
| | | சிந்துஜா |
| | | கௌசிகன் |
| யோகேஸ்வரன் | அல்லி | ஜமி |
| | | அளிரா |
| | | அஜன் |
| நிதிஸ்வரன் | சிறிதேவி | நிதிசன் |
| | | நிதிசா |
| நதிஸ்வரன் | ரூபிகா | ருனிசன் |
| | | பருசன் |
| பானுரேகா | ரமணன் | அபினுஷா |

**பேரன்** : பொன்னர்

**தகப்பன்** : நாகமுத்து

**தாய்** : செல்லமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாமன்** : தில்லையம்பலம்

**மாமி** : செல்லமுத்து

**சகோதரர்** : கைலாயநாதன்

இராமலிங்கம்

செல்லம்மா

கண்மணி

உலகநாதன்

**தன்வழி மைத்துனர் மைத்துனி**

சிவகாமிப்பி ள்ளை

பொன்னம்மா

கந்தையா

சபாரத்தினம்

புஷ்பவதி

**மனைவழி மைத்துனர் மைத்துனி**

கனகம்மா

செல்லத்துரை

நமசிவாயம்

இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்






**எமது குடும்பத் தலைவர் அமரர் திரு. நாகமுத்து பரராசசிங்கம்** அவர்களது மரணச் செய்தியை அறிந்து ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், மரணச் சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியவர்களுக்கும் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, விளம்பரத்தினை வெளியிட்டு வைத்தவர்களுக்கும் ஆத்ம சாந்திக் கிரியை, மதியபோசனம் முதலானவற்றில் கலந்து கொண்டவர்களுக்கும், உறவினர்கள், நண்பர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**இவ்வண்ணம்**
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு.

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1927 - 2005

அமரர் உயர்திரு. நாகமுத்து பரராச சிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org